# சோதிடமலர்

**SOTHIDA MALAR**




## உள்ளே!

### இம்மாதம் உங்களுக்கு எப்படி?

- ★ திருமணம் தடைப்படுவதேன்?
- ★ சோதிடம் கற்போம்
- ★ ஜன்ம இலக்கினம் (கும்பம்)
- ★ தமிழ் ஈழம் மலருமா?
- ★ அதிஷ்ட எண் ஞானம்
- ★ சனிப்பெயர்ச்சியின் பலன்

இன்னும் பல

துந்துபி மார்கழி (16-12-82—13-1-83) ரூபா 3-00

உ

# சோதிடமலர்

மாத சஞ்சிகை

ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (சம்ஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி ஸு மார்கழி மீ (16-12-1982) | இதழ் 9

" நடராஜ ஸ்துதி "

சகஸ்ரலோசண ப்ரப்ருத்ய சேஷ லேக சேகர
ப்ரசூன தூலிதோரணீ விதூசராங்க்ரி பீடபூ: |
புஜங்க ராஜமாலயா நிபத்தஜாட ஜூடக:
ச்ரியே சிராய ஜாயதாம் சகோர பந்துசேகர: | |

[இந்திரன் முதலிய தேவர்களின் கிரீடங்களிலுள்ள மலர்ப் பொடிகளின் வரிசையாற் பூசப்பட்ட திருவடிகளைப் பீடமாகவுடையவரும் வாசுகி என்னும் பாம்பினுல் சுற்றப்பட்ட உச்சிக்கொண்டையையுடையவரும், சந்திரனைத் தலையணியாகக் கொண்டிருப்பவருமான ஈஸ்வரன் எமக்கு அளப்பருங்காலம் செல்வத்தின் பொருட்டாக விளங்கட்டும்]

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வன்கள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள், போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே, கொடியே, விதானமே
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

## இந்த இதழில்.....................


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நாள் எப்படி | ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... | 4 |
| 3 | மார்கழி மாதக் கிரகநிலை | ... | 5 |
| 4 | கால ஹோரைகள் | ... | 6 |
| 5 | மார்கழி மாத வானியற்காட்சி | ... | 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... | 8 |
| 7 | ஜன்ம லக்கினம் | ... | 17 |
| 8 | சனிப்பெயர்ச்சியின் பலன்கள் | ... | 19 |
| 9 | தமிழ் ஈழம் மலருமா? | ... | 20 |
| 10 | திருமணம் தடைப்படுவதேன்? | ... | 23 |
| 11 | அதிஷ்ட எண் ஞானம் | ... | 26 |
| 12 | இராகு கேது நிழல் கிரகங்களே | ... | 28 |
| 13 | வளரும் விண்ணியல் | ... | 30 |
| 14 | சோதிடம் கற்போம் | ... | 33 |
| 15 | ஆய்வு மன்றம் | ... | 35 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி | ... | 36 |

# நாள் எப்படி ?

மார் 1 வியா (16-12-82) பிரதமை மாலை 5-17 வரை, மூலம் மாலை 6-47 வரை. சித்தம், பொதுச் சுபதினம். எல்லாக் கருமங்களையும் செய்யலாம். ராகு 1-52—3-22

மார் 2 வெள் (17-12-82) துவிதீயை இரவு 7-58 வரை, பூராடம்-மரணம் இரவு 9-56 வரை நாள் நன்முக இல்லை. சுபகருமங்களை விலக்குக. ராகு 10-52—12-22

மார் 3 சனி (18-12-82) திரிதீயை - மரணம் இரவு 10-43 வரை, உத்தராடம் பின்னிரவு 1-05 வரை யோகம் நன்முக இல்லாததால் புதிய கருமங்களை விடுத்து அன்றாட பணிகளை மட்டும் செய்க. ராகு 9-23—10-53

மார் 4 ஞா(19-12-82) சதுர்த்தி இரவு 1-25 வரை, திருவோணம் - அமிர்தம பின்னிரவு 4-10 வரை, சதுர்த்தி விரதம். விநாயகரைவழிபடுவதால் நல்லறிவைப் பெறலாம். புதுக்கருமங்களை விலக்குக. ராகு 4-53—6-23.

மார் 5 திங் (20-12-82) பஞ்சமி பின்னிரவு 3-52, அவிட்டம்-சித்தம் முழுவதும், பொதுவாக எல்லாக்கருமங்களுக்கும் நன்று. ராகு 7-54—9-24

மார்6 செவ் (21-12-82) ஷஷ்டி பி, இ. 5-54 வரை, அவிட்டம் சித்தம் காலை 7-00 வரை, திருவெம்பாவை பூஜாரம்பம், விநாயக ஷஷ்டி விரதம். உதயத்தின் முன் நீராடி இறை வழிபாட்டில் ஈடுபடுவதால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். விநாயக விரதம் அனுஷ்டிப்போர் இன்று உபவாசமிருந்து விநாயகரை வழிபட்டு நாளை பாரணஞ் செய்க. ராகு 3-24—4-54

மார் 7 புத (21-12-82) ஸப்தமி முழுவதும், சதயம் பகல் 9-25 வரை, சித்தாமிர்தம் இன்று சூரியன் வடக்கு நோக்கி சஞ்சரிக்க ஆரம்பிப்பதால் உத்தராயண ஆரம்பமாகும். அவசிய கருமங்களை பகல் 9-25 இற்கு முன் செய்க. ராகு 12-25—1-55

மார் 8 வியா (23-12-82) ஸப்தமி காலை 7-20 வரை, பூரட்டாதி பகல் 11-15 வரை, சித்தம், காலை 7-20 இன் மேல் அஷ்டமி, சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு 1-55—3-25

மார் 9 வெள் (24-12-82) அஷ்டமி காலை 8-03 வரை, உத்தரட்டாதி பகல் 12-23 வரை, சித்தம் சுப கருமங்களை விலக்குக. ராகு 10-56—12-26

மார் 10 சனி (25-12-82) நவமி காலை 7-59 வரை ரேவதி – மரணம் பகல் 12-44 வரை, புதிய கருமங்களை காலை 12-44 இன் மேல் செய்யவும். ராகு 9-26—10-56

மார் 11 ஞா (26-12-82) தசமி காலை 7-03 வரை, அதன் மேல் ஏகாதசி பி.இ. 5-22, அசுவினி – சித்தம் பகல் 12-18 வரை, ஸ்மார்த்த ஏகாதசி விரதம், விஷ்ணு வழிபாட்டால்நல்வாழ்வு கிட்டும் சுப கருமங்களை பகல் 12-18 இற்குள் மேற்கொள்ளவும். ராகு 4-57—6-27

மார் 12 திங் (27-12-82) துவாதசி பி: இ. 2-59 வரை, பரணி-சித்தம் பகல் 11-06 வரை, கார்த்திகைவிரதம். முருகனை வழிபடுவதால் வெற்றியுண்டாகும். சுபகருமங்களை விலக்குக. ராகு 7-57 — 9-27.

மார் 13 செவ் (28-12-82) திரயோதசி இரவு 12-03 வரை, கார்த்திகை பகல் 9-15 வரை சித்தாமிர்தம், பிரதோஷவிரதம், கர்ப்போட்ட ஆரம்பம், மாலை சிவதரிசனத்தால் பாவங்கள் நீங்கும். பகல் 9-15 இன்மேல் பூமி சம்பந்தப்பட்ட தொழில் செய்ய நன்று. ராகு 3-28—4-58

மார் 14 புத (29-12-82) சதுர்த்தசி இரவு 8-41 வரை, ரோகிணி காலை 6-53 வரை, அதன்மேல் மிருகசீரிடம் பி. இ. 4-08 வரை, சித்தம், இரவு நடேசர் ஆர்த்ராபிஷேகம். மத்திம சுபதினம் ராகு 12-28—1-58

மார் 15 வியா (30-12-82) பூரணை மாலை 5-03 வரை, திருவாதிரை-மரணம் இரவு 11-01 வரை பூரணைவிரதம், உதயம் நடேசர் ஆர்த்ரா தரிசனம், உதயகாலத்தில் நடராஜப் பெருமானைத் தரிசிப்பதால் முத்திப்பேற்றை அடையலாம். மாலையில் சூரிய அஸ்தமனத்திலிருந்து 6-37 வரை சந்திர விம்பத்தில் ஒரு பகுதி மறைக்கப்பட்டு சந்திரகிரகணம் நிகழும். சுபகருமங்களை விலக்குக. ராகு 1-59—3-29

மார் 16 வெள் (31-12-82) பிரதமை பகல் 1-19 வரை, புனர்பூசம்-சித்தம் இரவு 10-14 வரை பூரணை-பிரதமை-துவிதியை ஆகிய மூன்று திதிகளுக்குமுரிய சிரார்த்தத்தை இன்று செய்க. எல்லாச் சுபகருமங்களும் செய்யலாம். ராகு 10-59 —12-29

மார் 17 சனி (1-1-83) துவிதியை - சித்தம் பகல் 9-40 வரை, அதன்மேல் திரிதியை பி. இ. 6-14 வரை, பூசம் இரவு 7-26 வரை, முக்கிய கருமங்களை 9-29க்கு முன் செய்க. ராகு 9-29—10-59

மார் 18 ஞாயி (2-1-83) சதுர்த்தி பி. இ. 3-13 வரை, ஆயிலியம் மாலை 4-53 வரை மரணம். புதுமுயற்சிகளுக்கு ஏற்ற தினமன்று. ராகு 5-00—6-30

மார் 19 திங் (3-1-83) பஞ்சமி இரவு 12-44 வரை, மகம்-மரணம் பி. ப. 2-50 வரை. சுப கருமங்களை விலக்குக. ராகு 8-01—9-31

மார் 20 செவ் (4-1-83) ஷஷ்டி இரவு 10-55 வரை, பூரம் பகல் 1-24 வரை, சித்தாமிர்தம், பகல் 1-24 இன்மேல் பூமி சம்பந்தப்பட்ட புது முயற்சிகளைச் செய்யலாம். ராகு 3-31—5-01

மார் 21 புத (5-1-83) ஸப்தமி இரவு 9-46 வரை உத்தரம் பகல் 12-37 வரை அமிர்தசித்தம் இரவு 9-46 வரை நற்கருமங்கள் செய்யலாம். ராகு 12-31—2-01

மார் 22 வியா (6-1-83) அஷ்டமி-மரணம் இரவு 9-26 வரை. அத்தம்-சித்தம் பகல் 12-36 வரை சுபகருமங்களை விலக்குக. ராகு 2-02—3-32

மார் 23 வெள் (7-1-83) நவமி இரவு 9-50 வரை சித்திரை பகல் 1-18 வரை சித்தம். அவசிய கருமங்களை 9-50 இன் மேல் செய்க. ராகு 11-02—12-32

மார் 24 சனி (8-1-83) தசமி இரவு 10-58 வரை சுவாதி பகல் 2-43 வரை, நற்கருமங்கள் செய்யலாம். ராகு 9-32—11-02

மர் 25 ஞாயி (9-1-83) ஏகாதசி இரவு 12-38 வரை, விசாகம் மாலை 4-43 வரை மரணம் ஸர்வ ஏகாதசி விரதம் சுபகருமங்களை விலக்குக. ராகு 5-03—6-33

மார் 26 திங் (10-1-83) துவாதசி பி. இ. 7-12 வரை நற்கருமங்கள் செய்ய நன்று. ராகு 8-03—9-33

மார் 27 செவ் (11-1-83) திரயோதசி பி. இ. 5-14 வரை, கேட்டை-மரணம் இரவு 10-00 வரை, பிரதோஷவிரதம், கர்ப்போட்ட முடிபு, புதுமுயற்சிகளை விலக்குக. ராகு 3-33—5-03

மார் 28 புத (12-1-83) சதுர்த்தசி முழுவதும், மூலம்-மரணம் இரவு 1-03 வரை, சுபகருமங்களுக்கேற்ற தினமன்று. ராகு 12-34—2-04

மார் 29 வியா (13-1-83) சதுர்த்தசி காலை 7-55 வரை, பூராடம் பி. இ. 4-11 வரை, சித்தம் அமாவாசை விரதம், போகிப்பண்டிகை, புதுமுயற்சிகளை விலக்குக. ராகு 2-04—3-34

## மார்கழி மகிமை

தேவர்களுக்குரிய ஒருநாளில் வைகறைப் போது மார்கழிமாத விடியற்காலம். இவ்வமையத்தில் தேவவழிபாடு செய்வது தேவர்களுக்குபிரீதியாகும்.

இதுபற்றியே மார்கழிமாதம் முழுவதும் சில ஆலயங்களில் உதயகாலப் பூஜை விசேடமாக நடைபெறுகிறது.

மக்களெல்லோரும் விடியற் காலையில் எழுந்து கடவுளை வழிபடவேண்டுமென்று ஒருவரையொருவர் எழுப்பி நித்திய கருமங்களை நிறைவேற்ற நீராடப்போகும் பாவனையில் அமைந்திருக்கின்றது திருவெம்பாவை.

பனி, குளிர் காலங்களில் சொகுசாகக்காட்டும் உறக்கத்திலிருந்து நம்மை எழுப்பிச் சுறுசுறுப்பாகவும், சந்தோஷமாகவும் இருக்கச் செய்யும் இம்மாதம் ஆத்மீக மறுமலர்ச்சிக்கு சிறந்ததாகிறது. ஆரோக்கியம், இன்பவாழ்வு, சுகம் இவற்றை அடைவான்வேண்டி இம்மாத மகிமையை உணர்ந்து மாண்புறும் மார்கழியில் வைகறைத்துயிலெழுந்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக!

ஆர்த்திராதர்சனம்:-

நட்சத்திரங்கள் வைரமணிபோல் வெண்ணிறம், நீலம், மஞ்சள், செந்நிறம் எனப்பல நிறங்களாக இருந்தபோதிலும் செந்நிறமுடையதே ஆர்த்திரா என சமஸ்கிருதத்தில் திருவாதிரை நட்சத்திரமாகும். இது அதிக வெப்பத்தையுடையதால் அக்கினி ஸ்வரூபமான சிவசோதியை உணர்த்துகிறது.

மானாட, மழுவாட, மதியாடப் புனலாட மங்கை சிவகாமியுடன் நடனமாடும் நடராஜப் பெருமானின் நடனக்கோலத்தைக் காண்பதே ஆர்த்ராதர்சனமாகும். மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தில் முதல் ஒன்பது நாளும் எம்பாவை பாடி நோன்பிருந்த யாபேரும் (முக்கியமாகப் பெண்கள்) அலகில் சோதியன் அம்பலத்தாடுவானின் ஆர்த்திரா தின அபிஷேக ஆராதனை (மார்கழி மாதத்தில் நெய் அபிஷேகம் முக்கியமாகும்) களைக் கண்டும், ஆர்த்திரா தின ஆடல் காட்சியைக் கண்குளிரக்கண்டும் பேறுகள் பெறுவதும் பண்டுதொட்டுப் பெற்று வரும் பெரும் பேறாகும்.

ஆ—ர்


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### துந்துபி ஹூ மார்கழி மீ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (16-12-82 முதல் 13-1-83 வரை)

| இங் டிச | தமி மார் | வாரம் | தனுசு ம.மி. முதல் (காலை) | தனுசு ம.மி. வரை (காலை) | மகரம் ம. மி. வரை (காலை) | கும்பம் ம. மி. வரை (பகல்) | மீனம் ம. மி. வரை (பகல்) | மேடம் ம. மி. வரை (பி.ப) | இடபம் ம. மி. வரை (மாலை) | மிதுன ம. மி. வரை (மாலை) | கடகம் ம. மி. வரை (இரவு) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (பி.இ) | துலாம் ம. மி. வரை (பி.இ) | விருச்சி ம. மி. வரை) (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | வியா | 6 22 | 8 30 | 10 26 | 12 10 | 1 53 | 3 42 | 5 45 | 7 56 | 10 04 | 12 04 | 2 03 | 4 07 | 6 18 |
| 17 | 2 | வெள் | 6 19 | 8 25 | 10 21 | 12 05 | 1 48 | 3 37 | 5 40 | 7 51 | 9 59 | 11 59 | 1 58 | 4 02 | 6 13 |
| 18 | 3 | சனி | 6 14 | 8 22 | 10 18 | 12 02 | 1 45 | 3 34 | 5 37 | 7 48 | 9 56 | 11 56 | 1 55 | 3 59 | 6 10 |
| 19 | 4 | ஞாயி | 6 11 | 8 19 | 10 15 | 11 59 | 1 42 | 3 31 | 5 34 | 7 45 | 9 53 | 11 53 | 1 52 | 3 56 | 6 07 |
| 20 | 5 | திங் | 6 08 | 8 15 | 10 11 | 11 55 | 1 38 | 3 27 | 5 30 | 7 41 | 9 49 | 11 49 | 1 48 | 3 52 | 6 03 |
| 21 | 6 | செவ் | 6 04 | 8 11 | 10 07 | 11 51 | 1 34 | 3 23 | 5 26 | 7 37 | 9 45 | 11 45 | 1 44 | 3 48 | 5 59 |
| 22 | 7 | புதன் | 6 00 | 8 07 | 10 03 | 11 47 | 1 30 | 3 19 | 5 22 | 7 33 | 9 41 | 11 41 | 1 40 | 3 44 | 5 55 |
| 23 | 8 | வியா | 5 56 | 8 02 | 9 58 | 11 42 | 1 25 | 3 14 | 5 17 | 7 28 | 9 36 | 11 36 | 1 35 | 3 39 | 5 50 |
| 24 | 9 | வெள் | 5 51 | 7 59 | 9 55 | 11 39 | 1 22 | 3 11 | 5 14 | 7 25 | 9 33 | 11 33 | 1 32 | 3 36 | 5 47 |
| 25 | 10 | சனி | 5 48 | 7 55 | 9 51 | 11 35 | 1 18 | 3 07 | 5 10 | 7 21 | 9 29 | 11 29 | 1 28 | 3 32 | 5 43 |
| 26 | 11 | ஞாயி | 5 44 | 7 51 | 9 47 | 11 31 | 1 14 | 3 03 | 5 06 | 7 17 | 9 25 | 11 25 | 1 24 | 3 28 | 5 39 |
| 27 | 12 | திங் | 5 40 | 7 48 | 9 44 | 11 28 | 1 11 | 3 00 | 5 03 | 7 14 | 9 22 | 11 22 | 1 21 | 3 25 | 5 36 |
| 28 | 13 | செவ் | 5 37 | 7 44 | 9 40 | 11 24 | 1 07 | 2 56 | 4 59 | 7 10 | 9 18 | 11 18 | 1 17 | 3 21 | 5 32 |
| 29 | 14 | புத | 5 33 | 7 39 | 9 35 | 11 19 | 1 02 | 2 51 | 4 54 | 7 05 | 9 13 | 11 13 | 1 12 | 3 16 | 5 27 |
| 30 | 15 | வியா | 5 28 | 7 36 | 9 32 | 11 16 | 12 59 | 2 48 | 4 51 | 7 02 | 9 10 | 11 10 | 1 09 | 3 13 | 5 24 |
| 31 | 16 | வெள் | 5 25 | 7 31 | 9 27 | 11 11 | 12 54 | 2 43 | 4 46 | 6 57 | 9 05 | 11 05 | 1 04 | 3 08 | 5 19 |
| ஜன | | | | | | | | | | | | | | | |
| 1 | 17 | சனி | 5 20 | 7 27 | 9 23 | 11 07 | 12 50 | 2 39 | 4 42 | 6 53 | 9 01 | 10 01 | 1 00 | 3 04 | 5 15 |
| 2 | 18 | ஞாயி | 5 16 | 7 24 | 9 20 | 11 04 | 12 47 | 2 36 | 4 39 | 6 50 | 8 58 | 10 58 | 12 57 | 3 01 | 5 12 |
| 3 | 19 | திங் | 5 13 | 7 21 | 9 17 | 11 01 | 12 44 | 2 33 | 4 36 | 6 47 | 8 55 | 10 55 | 12 54 | 2 58 | 5 09 |
| 4 | 20 | செவ் | 5 10 | 7 16 | 9 12 | 10 56 | 12 39 | 2 28 | 4 31 | 6 42 | 8 50 | 10 50 | 12 49 | 2 53 | 5 04 |
| 5 | 21 | புதன் | 5 05 | 7 13 | 9 09 | 10 53 | 12 36 | 2 25 | 4 28 | 6 39 | 8 47 | 10 47 | 12 46 | 2 50 | 5 01 |
| 6 | 22 | வியா | 5 02 | 7 08 | 9 04 | 10 48 | 12 31 | 2 20 | 4 23 | 6 34 | 8 42 | 10 42 | 12 41 | 2 45 | 4 56 |
| 7 | 23 | வெள் | 4 57 | 7 04 | 9 00 | 10 44 | 12 27 | 2 16 | 4 19 | 6 30 | 8 38 | 10 38 | 12 37 | 2 41 | 4 52 |
| 8 | 24 | சனி | 4 53 | 7 00 | 8 56 | 10 40 | 12 23 | 2 12 | 4 15 | 6 26 | 8 34 | 10 34 | 12 33 | 2 37 | 4 48 |
| 9 | 25 | ஞாயி | 4 49 | 6 56 | 8 52 | 10 36 | 12 19 | 2 08 | 4 11 | 6 22 | 8 30 | 10 30 | 12 29 | 2 33 | 4 44 |
| 10 | 26 | திங் | 4 45 | 6 52 | 8 48 | 10 32 | 12 15 | 2 04 | 4 07 | 6 18 | 8 26 | 10 26 | 12 25 | 2 29 | 4 40 |
| 11 | 27 | செவ் | 4 41 | 6 48 | 8 44 | 10 28 | 12 11 | 2 00 | 4 03 | 6 14 | 8 22 | 10 22 | 12 21 | 2 25 | 4 36 |
| 12 | 28 | புதன் | 4 37 | 6 44 | 8 40 | 10 24 | 12 07 | 1 56 | 3 59 | 6 10 | 8 18 | 10 18 | 12 17 | 2 21 | 4 32 |
| 13 | 29 | வியா | 4 33 | 6 40 | 8 36 | 10 20 | 12 03 | 1 52 | **3 55** | **6 06** | 8 14 | 10 14 | 12 13 | 2 17 | 4 28 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்! மார் 29உ (13-1-83) மாலை 5 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (3-55 — 6-06) மிதுன லக்னம்

# மார்கழி மாதக் கிரகநிலை




## கிரகமாற்றங்கள்

*11வ (26-12-82) பி. இ. 12-37க்கு மக-புத*
*16வ (31-12-82) இரவு 9-16க்கு மகர-சுக்*
*25வ (9-1-83) பகல் 3-24க்கு கும்-குஜ*
*24வ புதன் வக்ராரம்பம்*
*27வ ,, அஸ்தமனம்*

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார் | 2வ | (17-12-82) | பி. இ. | 4-42 முதல் | மகரம் |
| | 5வ | (20-12-82) | மாலை | 5-37 ,, | கும்பம் |
| | 7வ | (22-12-82) | பி.இ. | 4-51 ,, | மீனம் |
| | 10வ | (25-12-82) | பகல் | 12-44 ,, | மேடம் |
| | 12வ | (27-12-82) | மாலை | 4-42 ,, | இடபம் |
| | 14வ | (29-12-82) | மாலை | 5-33 ,, | மிதுனம் |
| | 16வ | (31-12-82) | மாலை | 4-57 ,, | கடகம் |
| | 18வ | (2-1-83) | மாலை | 4-53 ,, | சிங்கம் |
| | 20வ | (4-1-83) | இரவு | 7-13 ,, | கன்னி |
| | 22வ | (6-1-83) | இரவு | 12-56 ,, | துலாம் |
| | 25வ | (9-1-83) | பகல் | 10-11 ,, | விருச்சிகம் |
| | 27வ | (11-1-83) | இரவு | 10-00 ,, | தனுசு |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மார்கழி 29 வ மாலை 5-00 மணிக்கு மிதுன லக்னம் என அறிந்து கொண்ட பின் மிதுனம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் அரசியல் நிலைமையில் பல சிக்கல்கள் கஷ்டங்கள் தோன்றும். நாட்டில் அமைதியின்மை காணப்படும். கொலை, களவு, கொள்ளை முதலிய துர்ச்செயல்கள் நடந்து கொண்டே இருக்கும். பொருளாதார நிலை நடுத்தரமாகவே காணப்படும். விவசாயத்துறையில் நோய் முதலியவற்றால் பயிர்கள் வாட்டமடையும். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (மார்கழி மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6மணி 22 நிமிஷம்)

| வாரம் | 6...22<br>7...22 | 7...22<br>8...22 | 8...22<br>9...22 | 9...22<br>10...22 | 10...22<br>11...22 | 11...22<br>12...22 | 12...22<br>1...22 | 1...22<br>2 . 22 | 2...22<br>3...22 | 3...22<br>4...22 | 4.. 22<br>5...22 | 5.. 22<br>6...22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# மார்கழி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

16-12-82 — 13-1-83

சூரியன்:- 16-12-82 பி.ப. 3-36ல் (நிரயன)தனு ராசிப்பிரவேசம்.
உதயம் காலை 6-22
அஸ்தமனம் மாலை 5-49
13-1-83 உதயம் காலை 6-34
அஸ்தமனம் மாலை 6-02

சந்திரன்:- 16-12-82 சந்திரதர்சனம்
24-12-82 பூர்வாஷ்டமி காலை 8-03
30-12-82 பூரணை மாலை 5-03
6-01-83 அபராஷ்டமி மு.இ. 9-26

## கிரகங்கள்

புதன்:- 13-12-82ல் மேற்கில் உதயமாகிய இக் கிரகம் மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின்போது 14 பாகை உயரத்தில் காணப்படும். 30-12-82ல் சூரியனிலிருந்து கூடிய தூரமான 20 பாகை உயரத்தில் காணப்படும். பின் அதன் உயரம் குறைந்துவரும். 8-1-83ல் வக்கிரகதியிற் செல்லத் தொடங்கி 11-1-83ல் மேற்கில் அஸ்தமனமடையும். 26-12-82ல் மகரராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின்போது மேற்கு அடிவானத்தில் 10 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 17 பாகை உயரத்தில் காணப்படும். 31-12-82ல் மகரராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்;- மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் போது மேற்குவானத்தில் 40 பாகை உயரத்தில் இருக்கும் இக்கிரகம் மாத முடிவில் 34 பாகை உயரத்திற் காணப்படும். 9-1-83ல் கும்பராசியிற் பிரவேசிக்கும்.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரியோதயத்தின் முன் கிழக்குவானத்தில் 26 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 48 பாகை உயரத்திற் காணப்படும். 27-12-82ல் விருச்சிக ராசியில் அனுஷம் 2-ம் பாதத்திலும் 13-1-83ல் அனுஷம் 3-ம் பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி:- மாதத் தொடக்கத்தில் சூரியோதயம்முன் கிழக்கு வானத்தில் 51 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 78 பாகை உயரத்திற் காணப்படும். 12-1-83ல் துலாராசியில் சுவாதி 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus) 1-1-83 விருச்சிக ராசியில் அனுஷம் 3-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

வருணன் (Neptune) 23-12-82ல் தனுராசியில் 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

குபேரன் (Pluto) துலாராசியில் சித்திரை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

16-12-82 பி.ப. சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் ¾ பாகை. சந்திரதர்சனத்துடன் அவதானிக்கவும்.

16-12-82 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு புதன் 1½ பாகை. மாலை சந்திரதர்சனத்துடன் இதனையும் அவதானிக்கவும்.


19-12-82 காலை சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 1½ பாகை. சூரியாஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

22-12-82 பகல் 10-08ல் சூரியன் சாயன மகர ராசிப் பிரவேசம். உத்தராயண ஆரம்பம்.

7-1-83 பின்னிரவு சந்திரனுக்குத் தெற்கு சனி 2 பாகை.

10-1-83 அதிகாலை சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 2 பாகை

இம்மாத வானியற் கழகக்கூட்டம் 19-12-82 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஷெ விலாசத்தில் நிகழும்.




டாக்டர் பண்டிற் **கே. என். நவரத்தினம் A. F. A.**

**16-12-82 முதல் 13-1-83 வரை**

> பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசிக்காரருக்கு சூரியபகவான் இரஜத மூர்த்தியாக 9-ம் இராசியில் பவனிவருவதால் கடந்த மாதங்களைவிட நற்பலன்கள் அதிகரிக்கும் தூரதேச தொடர்புகள் உண்டாகும். பொருளாதாரம் வளர்ச்சியாகும், அந்தஸ்து உயர்வடையும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். 7-ல் சனி இருப்பினும் செய்கருமங்களில் தடைகள் ஏற்படாது. இனத்தவர்களிடையே உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். பிரயாணங்கள் நன்மை தருவனவாக இருக்கும். பிதுர்வழி நன்மைகள் கிடைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபன் சுக்கிரன் 9-ம், 10-ம் இராசிகளில் நற்சஞ்சாரம் செய்வதால் இல்லறம் சிறந்தோங்கும். களத்திரசுகம் உண்டு. குடும்பகௌரவம் வளர்ச்சியடையும். பணவருவாய் திருப்திகரமானதாக இருக்கும்.

வியாபாரிகட்கு செட்டி புதன் 9-ம், 10-ம் இராசிகளில் அழகன் சுக்கிரனுடன் சேர்க்கை அடைவதால் அழகு சாதனப் பொருட்களின் விற்பனை அதிகரிக்கும். வங்கிவசதிகள் போதியளவு கிடைக்கும். வெளிநாட்டுவர்த்தகம் விருத்தியடையும். கள்ளமார்க்கட் வியாபாரிகள் நன்மை அடைவர்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல்வாதி சூரியன் பலமடைந்து இருப்பதால் எதுவித குறையுமேற்

படாது. எடுத்த கருமமெல்லாம் தடைகளின்றி வெற்றியளிக்கும், மேலோர், கீழோர் என்ற பாகுபாடு இல்லாது கடமையே கண்ணுயிருப்பர். சக ஊழியர் மத்தியில் நன்மதிப்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகட்கு சனி 7-ல் இருப்பதால் பயிர்ச் செய்கையில் சிறுசிறு தடங்கல்கள் தோன்றும். ஆனாலும் பயிர்ச்செய்கை பாதிப்படையாது. உற்சாகமும் குறைவடையாது. அரசாங்க நடவடிக்கைகள் சாதகமாக அமையும்.


தொழிலாளர்கட்கு கடின உழைப்பால் முன்னேற்றம் உண்டு. தொழில் வாய்ப்புகள் சீராகக் கிடைக்கும். உழைப்பிற்கேற்ப ஊதியமும் கிடைக்கும். பங்காளிகள் மத்தியில் சிறு சிறு நஷ்டங்களேற்படும்.

மாணவர்கட்கு வித்தியாகாரகன் புதன் கேந்திர திரிகோணமடைவதால் கல்வி வளர்ச்சிக்கு அபரிமிதமாக உதவிசெய்வான், பரீட்சைகளில் வெகு சாமர்த்தியமாக நடந்துகொள்வீர்கள். அந்நியதேசக் கல்வி நல்ல முன்னேற்றத்தைத் தரும். பெரியோர் உதவிகள் கிடைக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுகள் கைகூடும். ஆடை அலங்காரங்களில் செலவுகள் அதிகரிக்கும். குடும்பப் பெண்களுக்கு கணவனின் அனுசரணை கிடைக்கும். பொருள் பண்ட சேர்க்கையுண்டாகும். தொழில் வாய்ப்புகளும் கிடைக்க இடமுண்டு.

அதிஷ்ட நாட்கள்: டிச 20 பி.ப, 21, 22
ஜன 4 பி. ப, 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: டிச 23, 24, 25 மு ப.
ஜன 9, 10, 11 மு. ப.



## இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் லோகமூர்த்தியாக 8 இல் சஞ்சரிப்பதால் தீமையான பலன்களே ஏற்படும். அட்டமராசியில் கிரகங்கள் சஞ்சரிப்பதால் மனக்கவலைகள் அதிகரிக்கும். 6 ல் சனி இருப்பது ஆரோக்கியத்திற்கு கேடாகும். செவ்வாய் 9 இல் இருப்பதால் பிதுர்வர்க்க தொல்லைகளை உருவாக்குவார். பிரயாணங்களால் கஷ்டங்களேற்படும். பணக்கஷ்டம் அதிகரிக்கும். இனத்தவர்களிடையே பிரிவினை தலைதூக்கும். தொட்ட கருமமனைத்தும் சித்தியாகாமல் போகும். நாலுகால் பிரயாணிகளால் நஷ்டங்கள் ஏற்படும். அவமானம் அபகீர்த்தி என்பன எந்த நேரமும் ஏற்பட்டவண்ணமிருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபனும் ஜனம அதிபதியும் கூடி அட்டமத்தில் இருப்பதால் மாத முற்பகுதியில் சற்று குழப்பமான நிலையே இருக்கும். பணக்கஷ்டமும் தோன்றும். இல்லறவாழ்க்கையில் பிரச்சினைகள், பிளவுகள் தோன்றும், மங்கள காரியங்கள் தடைப்படும். மாதபிற்பகுதி எல்லா வகையிலும் நற்பலன் தரும்.

வியாபாரிகட்கு இம்மாதம் சாதகமாக அமையாது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். 9 இல் செவ்வாய் அரசியல் ரீதியில் தொல்லைகளை உருவாக்கும். வங்கிநிலையும் திருப்தியளிக்காது. மாத பிற்பகுதியில் நிலைமை ஓரளவு சீரடையும். கள்ள மார்கட் வியாபாரிகள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் தொல்லைகள் அதிகரிக்கும். தடைப்பட்ட நற்கருமங்கள் குழம்பி பதவி உயர்வுகளில் தடைகள் தண்டனைக்குரிய மாற்றங்கள் என்பன ஏற்படலாம். மேலதிகாரிகள் உங்களைப் புறக்கணித்துநடப்பர். பயத்துடன் உங்கள் கருமங்களில் ஈடுபடுவீர்கள்.

விவசாயிகட்கு விவசாயி சனி 6 இல் உச்சமாக இருப்பதால் அதிகம் கவலையடையத் தேவையில்லை, உழைப்பும் உற்சாகமும் நிறைந்திருக்கும். எனினும் சூரியன் பலமற்று இருப்பதால் பயிர்ச் செழிப்பைக் காணமுடியாது. பயிர்களை நோய்கள் பீடிக்கக்கூடும். அவதானத்துடன் இருக்கவும்.

தொழிலாளிகட்கு கடின உழைப்பு ஏற்படும். கூட்டுறவுத் தொழிலாளரிடையே ஒற்றுமை நிலவிவந்தாலும் பொருளாதார ரீதியில் நன்மை ஏற்படாது. பங்குத்தொழிலிலும் நன்மையில்லை.

மாணவர்கட்கு கல்விக்குரியவன் 9-ம் இடத்தில் மாத பிற்பகுதியில் சஞ்சரிக்கும் வரை சற்று கஷ்டமானகாலமே. ஊக்கமின்மை அதிகரிக்கலாகும். கலைத்துறையில் நாட்டமிருக்காது. விளையாட்டுக்களில் தோல்வியடைய நேரும். தூரதேசக்கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடையாது.

பெண்கட்கு சிற்சில கஷ்டங்கள் தோன்றி மறையும். காதல் விவகாரங்களில் நன்மையில்லை. விவாகப் பேச்சுகளில் திருப்தியேற்படாது. குடும்பப் பெண்களுக்கு முன்னேற்றமில்லை. பணக் கஷ்டம் தோனறும். கணவனுடன் உறவுகள் சாதகமாக அமையாது.

அதிஷ்ட நாட்கள்: டிச 23, 24, 25 மு. ப,
ஜன 7, 8, 9, மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 16, 17, 24 பி. ப,,
ஜன 10 பி. ப, 11, 12.




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3-ம்கால்

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்கு சூரிய பகவான் தாம்ரமூர்த்தியாக 7-ம் இராசியில் சஞ்சரிப்பதால் கடந்தமாத நற்பலன்கள் கிடைப்பதற்கில்லை. 6 இல் வியாழன் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பார். 8-ம் இடத்துச் செவ்வாயால் எதிர்பாராத நஷ்டங்கள் இழப்புகள் ஏற்படலாகும். எண்ணிய கருமங்கள் தடைகளால் தாமதப்பட்டே நிறைவேறும். சிறுபயணங்கள் நஷ்டங்களைத் தரும். பிதுர்வழி கவலைகள் தோன்றும், கடன்பட்டு கருமமாற்ற வேண்டி நேரும். பிறதேச நன்மைகள் ஏற்படாது. வாக்கு கௌரவம் ஓரளவு நிலைக்கும்.

குடும்பஸ்தர்களுக்கு சனி 5 இல் இருப்பதால் புத்திர சுகங்கள் குறைவடையும். இல்லற வாழ்வில் மகிழ்ச்சியிராது. களத்திரவழி தொல்லைகள் ஏற்படும். பணமுடை கவலை தரும். உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

வியாபாரிகட்கு செட்டி புதன் அதிகம் உதவமாட்டார். 6 இல் வியாழன் இருப்பது வங்கி உதவிகள் கிடைக்க வழி செய்யும். முதலீடுகள் ஏற்ற வருவாய் அளிக்காது. வெளிநாட்டு வர்த்தகத்தில் இலாபமில்லை. பங்கு வியாபாரம் நன்றல்ல, கள்ள மார்க்கட் வியாபாரிகள் நஷ்டம் அடைவர்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 7 இல் இருப்பதால் நன்மையில்லை. சக உத்தியோகத்தருடன் அந்நியோன்யமாக நடந்தாலும் கடமையைச் சரிவரச் செய்ய இயலாதிருக்கும். திட்டமிட்ட கருமங்கள் குழப்பமடையும். கருமமாற்றுவதில் வசதியீனங்கள் ஏற்பட்டு மனக்கவலையுண்டாகும்.

விவசாயிகட்கு சனி 5 இல் இருப்பதால் கவலையில்லை. கடின உழைப்பின் மேல் பயிர் வளர்ச்சி ஏற்படும். நோய் நொடிகள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். 3 இல் செவ்வாய் வயல் தகராறுகளை உண்டுபண்ணும். புதுப்பயிர்கள் நாட்டுவது நன்றல்ல.


தொழிலாளர்கட்கு சக தொழிலாளரின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும் ஊதியம் திருப்தி தராது. தொழில் வாய்ப்புகள் அதிகம் இல்லை. பங்குத்தொழில், கூட்டுறவுத் தொழில் முதலியன நஷ்டந் தரும். தொழிலகத்தில் களவுகள் ஏற்படலாம்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமில்லை. பரீட்சைகளில் தோற்றுவதற்கு சாதகமான காலமாக இல்லை. கலை, விளையாட்டுக்களில் வெற்றி கிடைப்பது கஷ்டம். தூரதேசக் கல்வியில் அதிக முன்னேற்றமிராது; 6 இல் வியாழன் இருப்பதால் தொழிற்கல்வி கற்போர் நன்மையடைவர்.

பெண்களுக்கு நினைத்த கருமங்கள் கைகூடாது. சுற்றுடலில் அவமிருத்து, அவமானம் என்பன ஏற்படும். காதற் கல்யாணம் சரிப்பட்டு வராது. குடும்பப் பெண்களுக்கு ஒருவிதத்திலும் நன்மையில்லை. தொழில் பார்க்கும் பெண்கள் வியாழன் 6 இல் இருப்பதால் சிறிது நன்மையடைவார்கள்.

அதிஷ்ட நாட்கள்: டிச 25 பி. ப, 26, 27 மு. ப,
ஜன 9 பி. ப, 10, 11 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 18, 19, 20 மு. ப,
27 பி. ப, 28, 29 மு. ப




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு சூரியபகவான் 6-ம் இடத்தில் சுவர்ணமூர்த்தியாக இராஜபவனி வந்துகொண்டிருக்கிறார். சூரியன் பலமடைவதால் பலவிதத்திலும் நன்மையான பலன்களை

எதிர்பார்க்கலாம். வியாழ பகவான் பணக்கஷ்டம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வார். வியாழனின் நற்சஞ்சாரத்தால் ஆரம்பிக்கும் கருமங்கள் அனைத்தும் வெற்றியளிக்கும். தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரயாணங்கள் மூலம் சாதகமான பலன்கள் கிட்டும். இனபந்துக்கள் உங்கள் உதவியைப் பெறுவர். அந்தஸ்தில் உயர்வு அடைவீர்கள். வாழ்க்கை வெற்றியுடன் அடைய தெய்வீக கடாட்சம் உண்டு.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் மூர்த்தி பலமடைந்து ஸ்தானபலத்துடன் சஞ்சரிப்பதால் இல்லற வாழ்வில் பூரண மகிழ்ச்சி நிலவும். புத்திர முன்னேற்றங்கள், உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். சீர்திருந்த வழிகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். துணிந்து உங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம்.

வியாபாரிகட்கு புதன் 6-ல் சுக்கிரனுடன் கூடியிருப்பதையிட்டு கவலை கொள்ளத் தேவையில்லை. வங்கிநிலை சிறப்பாகவிருக்கும். முன்செய்த வியாபார விஸ்தரிப்புகள் நன்மையளிக்கும். பங்கு வியாபாரிகளிடையே கஷ்டங்கள் தோன்றினாலும் வெற்றிகரமாகச் சமாளித்துக்கொள்ள முடியும். புது வியாபாரங்கள் வெற்றியளிக்கும். முதலீடுகளை மாதபிற்பகுதியில் செய்வது நன்று.

உத்தியோகத்தர்கட்கு அரசசெல்வாக்கு அதிகரிக்கும் காலமாகும். சகாக்களை உங்கள் வசப்படுத்த முடியும். உங்கள் அந்தஸ்து உயர்வடைவதால் சக ஊழியரிடையே போட்டி பொறாமைகள் உதயமாகலாம். எவ்வாறாயினும் வெற்றி உங்கள் பக்கமே.

விவசாயிகட்கு சனி 4ல் இருப்பினும் பயிர்ச்செய்கை எவ்விதத்திலும் பாதிப்புறாது. வயல் தகராறுகள், அரசியல் தொல்லைகள், நோய்கள் முதலியன விவசாயத்தைப் பாதிக்காதவாறு சூரிய பகவான் காப்பாற்றுவார். நீண்டகால தொல்லைகள் நீங்கச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு ''எல்லாம் இன்பமயம்.'' தொழில் வாய்ப்புகளுக்கு நல்ல சந்தர்ப்பம். உழைப்பைக் கண்டு தொழில் அதிபர்கள் திருப்தியடைவர். ஊதியம் உயர்வடையும். பங்காளர் கூட்டுறவாளர் யாராயினும் நற்பலனடைவர். நற்பலனடைவர். உங்கள் நற்பெயர் சொந்தத்தில் தொழில் ஆரம்பிக்க வழிவகுக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் அபார முன்னேற்றம் கிடைக்கும். ஞாபகசக்தி வளர்ச்சியடைவதால் பரீட்சையில் சித்தியடையும் வாய்ப்புகள் அதிகமாகும். கலைத்துறை, தொழில்நுட்பத் துறையில் நல்ல முன்னேற்றமுண்டு. நேர்முகப் பரீட்சையில் சாதகமான முடிவுகளே ற்படும். தொழில் வாய்ப்புகளும் கிட்டும்.

பெண்கள் கவலைப்பட ஏதுமில்லை. காதல் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். நினைத்த கருமங்களை தடைகளை மீறிச் சாதிப்பர். விவாகப் பேச்சுக்களுக்கு சாதகமான காலம். குடும்பப் பெண்கள் பிள்ளைகளால் நன்மையடைவர். தொழில் பார்ப்போர் தத்தமது தொழிலில் உயர்ச்சியடைவர்.

அதிஷ்ட நாட்கள்: டிச 16, 17, 27 பி. ப, 28
29 மு.ப, ஜன 11 பி.ப, 12, 13

துரதிஷ்ட நாட்கள்: டிச 20 பி. ப, 21, 22, 29 மு.ப.
30, 31 மு. ப.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியினர்க்கு சூரியன் 5-ம் இடத்தில் இரஜதமூர்த்தியாகப் பவனிவருவதால் நன்மைகள் அதிகரிக்கும். 6 ல் இருக்கும் செவ்வாய் இரகசிய எதிர்ப்புகளை வெற்றிகொள்ள உதவியாக இருக்கும். தடைப்பட்ட கருமங்கள் கைகூடும். கடந்த மாதத்தில் இருந்த பணமுடை படிப்படியாகக் குறைவடையும், தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். வாக்கு, கௌரவம் என்பன நிலைநாட்டப்படும். உறவினர் சேர்க்கை உங்களை மகிழ்விக்கும். தடைப்பட்ட பிரயாணம் மேற்கொள்வதன் மூலம் இலாபங்கள் ஏற்படும். மாதாவழி நற்பலன்கள் கிடைக்கும். இழந்த பொருட்கள் மீண்டும் உங்கள் கைக்கு வரலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் திரிகோணராசியில் இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். களத்திரசுகம் கிடைக்கும். புத்திரர்களால் லாபங்கள் கிட்டும். சமூகத்தில் அந்தஸ்து உயர்வடையும். நற்செய்திகள் கிடைக்கும்.

வியாபாரிகட்கு வர்த்தகம் லாபகரமாக நடைபெறும். புதுப்புது வியாபாரங்களை ஆரம்

பிக்கலாம். வங்கி வசதிகள் போதியளவு கிட்டும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தங்குதடையின்றி நடக்கும். கள்ளமார்க்கட் வியாபாரிகளும் கவலையடைய வேண்டியதில்லை.

உத்தியோகத்தர்களுக்கு ஜன்மாதிபன் சூரியன் திரிகோண ராசியில் அளப்பரிய உதவிகள் புரிவான். அரசியல் வட்டாரங்களில் உங்கள் மதிப்பும் மரியாதையும் பெருகும். வாக்குஸ்தானாதிபதி பொருள் லாபங்களை காட்டுவான். போட்டி போட்டவர்கள் பெட்டிப்பாம்பாகிவிடுவர். நன்மாற்றங்கள் கிடைக்கும்.

விவசாயிகட்கு 3-ல் சனி உச்சமடைவதால் பயிர்ச்செய்கை விருத்தியடையும். கடன் தொல்லைகள் குறைவடையும். பயிர்கள் நோய்களில் இருந்து பாதுகாக்கப்படும். புதுப்பயிர்கள் நட உகந்தகாலம். உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவீர்கள்.

தொழிலாளர்க்கு மிகவும் சிறப்பான மாதம். தொழில் வாய்ப்புகள் சர்வசாதாரணமாகக் கிடைக்கும். கடின உழைப்பும் நல்ல ஊதியமும் உள்ள மாதம். சக தொழிலாளர் அடங்கி நடப்பர். கூட்டுறவு தொழில் விருத்தியடையும். முதலாளிகளின் உதவிகள் கிட்டும்.

மாணவர்களுக்கு கல்வியில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும். கலை விளையாட்டுகளில் புகழ் சேரும். வெளிநாட்டுக்கல்வியில் நன்மைகள் உண்டாகும். தொழில் தேடும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பமாக இருக்கும். கணக்கியல் துறையிலுள்ள மாணவர் நல்ல வாய்ப்புகளை எதிர் நோக்குவர்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களுக்கு சிறப்பான காலம். கன்னிப்பெண்களுக்கு காதல் லீலைகள் அதிகரிக்கும். எதிர்பாலாரிடம் உங்கள் கை யோங்கும். பணச்செலவுகள் அதிகமாகும். குடும்பப் பெண்களுக்கு கணவனின் முன்னேற்றம் திருப்தியளிக்கும். தொழில் பார்ப்போர் முன்னேற்றமடைவர்.

அதிஷ்ட நாட்கள்: டிச 18,19,20பி.ப, 30,31மு.ப

துரதிஷ்ட நாட்கள்: டிச 23,24,25மு.ப. 31 பி.ப. ஜன 1, 2 மு. ப.




உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னிராசியைச் சார்ந்தவர்கட்கு சூரியன் 4-ம் வீட்டில் லோகமூர்த்தியாக வலம் வருவதால் கஷ்டங்கள் மத்தியில் காலத்தைக் கழிக்கவேண்டியிருக்கும். 3-ல் வியாழன் பணவிவகாரங்களில் சிக்கலை உண்டுபண்ணுவார். 5-ல் செவ்வாய் தொடங்கிய கருமங்களை நிறைவேற்றமுடியாமல் அல்லற்படுத்தும். மாதா பிதா வழிகளில் கவலைக்குரிய விஷயங்கள் நடைபெறும். தேகசுகம் பாதிப்படையும். பிரயாணங்கள் தடைப்படும். வாக்கு கௌரவம் என்பன வீழ்ச்சியடையும். இனத்தவர்களுடன் சேர்தலை தவிர்த்து நடத்தல் நன்மை பயக்கும். வெளிநாட்டுத் தொடர்புகள் குறையும்.

குடும்பஸ்தர்கட்கு சனீஸ்வரன் 2-ல் உச்சமடைந்திருப்பினும் உறவுகளுக்கு நன்றல்ல. புத்திரசுகம் கிடைப்பது கஷ்டம். களத்திரசுகம் திருப்தியளிக்காது. நற்காரியங்கள் தடைப்படும்.

வியாபாரிகட்கு முதலீடுகள் நல்ல பலனைத்தரமாட்டா. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் பாதிப்படையும். வங்கிவசதிகள் கவலைதரும்படியாக இருக்கும். பங்காளிகளிடையே பிளவுகள் தோன்றும். 4-ல் சுக்கிரன், புதன் இருப்பதால் சமயோசிதமாக கருமத்தை கொண்டு நடத்த முடியும். கள்ளமார்க்கட் வியாபாரம் நன்மை தராது.

உத்தியோகத்தர்கட்கு எவ்விதத்திலும் நன்மை ஏற்படாது. கடின உழைப்பு ஏற்படுமேயன்றி சலுகைகள் எதுவும் கிடையாது. சகாக்கள் ஒத்துழைக்கமாட்டார்கள். மேலிடத்தில் முறைபாடுகள் அதிகரிக்கும்.

சனீஸ்வர பகவான் இரண்டில் உச்சமாக இருப்பதால் விவசாயிகட்கு பயிர்ச்செய்கை அதிகம் பாதிப்படையாது. பயிர்வகை நாட்டல் செலவினங்களை உண்டுபண்ணும். வெள்ளம் போன்ற இயற்கையழிவுகள் ஏற்படலாகும். எல்லைத்தகராறுகள் வலுவடையும். வயல் பூமி சம்பந்தமான சேர்க்கைகள் தடைப்படும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தி பெருது. ஊதியம் பற்ருக்குறையாக இருக்கும். திடீர் செலவுகள் தோன்றும். உடல்நிலை தளர்வடைந்து வேலைசெய்ய முடியாதவாறு இருக்கும். கூட்டுறவுத்துறையில் குழப்பங்கள் தலைதூக்கும். பங்குத்தொழில் உகந்தல்ல.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படாது ஊக்கமும் உற்சாகமும் குறைந்துவிடும். பரீட்சையில் சித்தி கிடைப்பது கஷ்டம். கலைத்துறை ஈடுபாடுகள் நன்மைதராது. வெளிநாட்டுக்கல்வி சுமாராகவிருக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுகள் கைகூடாது. காதலர்களுடன் மனமுறிவேற்படும். பொருள் இழப்புகள் நஷ்டங்கள் ஏற்படும். குடும்பப் பெண்கள் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நடக்கமுடியாதவாறு இருக்கும்.

அதிஷ்ட நாட்கள். டிச 20 பி.ப, 21, 22, 31, பி. ப
ஜன 1, 2 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 25 பி. ப., 26, 27, மு. ப




சித்திரை 3, 4ம் கால், சுவாதி விசாகம் 1,2,3-ம் கால்

துலாராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் 3 இல் தாம்ரமூர்த்தியாகச் சஞ்சரிப்பதால் அதிக நன்மைகளை எதிர்பார்ப்பதற்கில்லை. ஜென்ம ராசியில் சனி உச்சமாகவிருப்பதால் கடின முயற்சிகளை ஏற்படுத்தும். 2-இல் வியாழன் இருப்பதால் பணக்கஷ்டங்களை ஓரளவு சமாளித்துக்கொள்ள முடியும். உள்ளூர்ப் பயணங்கள் அடிக்கடி ஏற்படுவதோடு சிறுசிறு லாபங்களும் கிடைக்கும். நோய் நொடிகளின்றி தேகாரோக்கியம் சிறப்பாக இருக்க வியாழபகவான் உதவுவார். நற்கருமங்கள் தடைகளின் மேல் நடைபெறும். பெற்றோர் வழி உறவுகள் நன்ருக அமையாது. கௌரவம், அந்தஸ்து என்பன ஓரளவு பாதுகாக்கப்படும். கடிதத் தொடர்புகள் மூலம் நன்மைகள் கிடைக்க வழியுண்டு.

குடும்பஸ்தர்கட்கு வியாழன் 2 இல் இருப்பதால் களத்திர சுகம், புத்திரசுகம் என்பன பாதிப்படையாதவாறு இருக்கும். பொருளாதார நிலையில் வீழ்ச்சி ஏற்படினும் சமாளித்துக்கொள்ள முடியும். உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். சூழ்நிலையில் மாற்றங்கள் தென்படும்.

வியாபாரிகட்கு வங்கி வசதிகள் கிடைத்தாலும் வியாபார விருத்தி குறைவாகவே இருக்கும். நாடோடி வியாபாரிகளும், கமிஷன் வியாபாரிகளும் நன்மை அடைவர். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இலாபந் தரமாட்டாது, பங்கு வியாபாரமும் சுமாராகவே இருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 3-ல் ஸ்தான பலமடைவதால் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். சுற்றுடலில் சில அமைதிக்குறைவான நிகழ்ச்சிகள் நடந்தாலும் கவலையின்றிக் கருமத்தைச் செய்யவும். சலுகைகளை அதிகம்எதிர்பார்க்க முடியாது.

விவசாயிகட்கு ஜன்மராசியில் சனி இருப்பதால் விவசாயத்தில் சற்று விருத்தி தென்படும். கடின உழைப்பில் ஈடுபட நேர்ந்தாலும், களை பிடுங்குதல் போன்ற செலவுகள் குறைவாகவே இருக்கும். காணித் தகராறுகள் சிறுசிறு தொல்லைகளை உண்டுபண்ணும்.

தொழிலாளர்கட்கு செய்தொழிலில் வெற்றி கிடைக்கும். தேவைக்கேற்ற அளவில் பணம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். சொந்தத்தொழில் லாபகரமாக அமையும். பங்குத்தொழில், கூட்டுறவுத் தொழில் போன்றன சிக்கல்களின்றி நடைபெறும். தொழில்வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதற்கில்லை. தபால் மூலம் கல்வி பயில்வோர் நன்மையடைவர். கஷ்டப்பட்டுக் கல்வி பயில்வதற்கேற்ற பலன்களை எதிர்காலத்திலேயே அடைய முடியும். பரீட்சைகளில் சித்தியடைவதற்கு உகந்த காலமாக இல்லை.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் சாதகமான பலன்களேற்படும். போக்குவரத்துக் காலங்களில் காதல் விவகாரங்களிலீடுபடுவர். குடும்பப் பெண்களும் தொழில் பார்ப்போரும் சனீஸ்வரன் உதவியால் வாழ்க்கையைச் சந்தோஷமாக கழிப்பர்.

அதிஷ்ட நாட்கள்: டிச 23, 24, 25 மு.ப,
ஜன 2 பி.ப, 3, 4 பி. ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 27 பி.ப, 28 மு.ப,
ஜன 4 பி.ப, 5, 6.




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

ஜன்மராசியை விருச்சிகமாக உடையவர்கட்கு சூரியன் இரஜதமூர்த்தியாக 2ல் பவனிவருவதால் நற்பலன்கள் அதிகரிக்கும். ஜன்மராசியில் உள்ள வியாழன் எடுத்தகருமங்கள் தாமதமின்றி நிறைவேற உறுதுணைபுரிவார். 3ல் செவ்வாய் உற்சாகத்துடன் உழைக்கவைப்பார். தனவரவு திருப்தியளிக்கும் வகையில் அமையும். திட்டமிட்டவாறு கருமங்கள் நடைபெறும். உறவினர் மத்தியில் செல்வாக்கு வளரும். தூரதேச உறவுகள் விருத்தியடையும். உடல்நிலை சீராக இருக்கும். இது வரை காணப்பட்ட மனக்கவலைகள் படிப்படியாக மறையும். சமூகத்தில் நல்ல கௌரவத்துடன் வாழ்வீர்கள்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் வீட்டில் புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்கள் இருப்பதால் வருமானம் உயர்வடையும். முகவசீகரத்தால் உங்கள் கருமத்தைச் சாதிப்பீர்கள். இனசன கொண்டாட்டங்கள் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

வியாபாரிகட்கு இலாபம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். புதிய முதலீடுகள் நன்மையளிக்கும். வெளிநாட்டு வர்த்தகம் எதிர்பார்க்குமளவிற்கு நன்மை தராவிடினும் கவலைப்பட வேண்டியதில்லை. பங்கு வியாபாரம் நற்பலனளிக்கும். கள்ள மார்க்கட் வியாபாரமும் இலாபந் தரும். தரகு வியாபாரிகள் அதிகம் சம்பாதிப்பர்.

உத்தியோகத்தர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றியடைய முடியும். வாக்குஸ்தானத்தில் பல கிரகங்கள் இருப்பதால் எதையும் சாதித்துக் கொள்வீர்கள். உங்கள் திட்டங்களை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். ஊதியம், பதவி முதலியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணலாம்.

விவசாயிகட்கு சனி 12 இல் இருப்பினும் பயிர்ச்செய்கையில் எவ்வித தாக்கமும் ஏற்படாது. நோய் நொடிகள் உங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும். எல்லைத் தகராறுகள் சமாதானமான முறையில் தீர்த்து வைக்கப்படும்.

தொழிலாளர்கட்கு சிறப்பான பலன்களே காணப்படுகின்றன. உங்கள் முகவசீகரம் எங்கேயும் சாதனை புரிந்தவாறிருக்கும். சொந்தத் தொழில் தேடும் காலமானால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். தொழிற்சாலையில் செல்வாக்குண்டாகும், ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களிலீடுபடுவீர்கள்,

மாணவர்கட்கு கல்வியில் பிரச்சினைகள் குறைந்த மாதம். ஞாபகசக்தி அதிகரிக்குமாதலால் பரீட்சையில் சாதகமான முடிவுகளை எதிர்பார்க்கலாம். சனி 12 இல் இருப்பதால் வெளிநாட்டுக் கல்வியில் சிறுசிறு தடங்கல்கள் தோன்றி மறையும். தொழில் முயற்சிகள் வெற்றியளிக்கும்

பெண்களுக்கு காதல் விடயங்கள் நிலை நிற்கும். கணவனின் முன்னேற்றம் குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தரும். விவாகப் பேச்சுக்கள் அதிகரிக்கும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 25 பி. ப, 26, 27 மு. ப,
ஜன 4 பி. ப, 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: டிச 29 பி. ப. 30, 31 மு. ப,
ஜன 7, 8, 9 மு. ப.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுராசிக்காரருக்கு சூரியபகவான் சுவர்ணமூர்த்தியாக ஜென்மராசியில் பவனிவருவதால் சிறப்பானபலன்களை அனுபவிப்பர். மேலும் 11-ம் வீட்டில் சனி உச்சமடைவதால் இனபந்துக்களாலும், ஆரம்பிக்கும் முயற்சிகளாலும் பணவருவாய் கிடைக்கும். ரவிபுத யோகத்தால் கஷ்டங்கள் அகன்றுவிடும் பிரயாணங்கள் எதுவானாலும் வெற்றியடைவீர்கள். சமூக சேவையில் செல்வாக்கு அதிகரிக்கும். எதிர் பாராதவகையில் திடீர்லாபங்கள் ஏற்பலாகும். தேகசுகம் பாதுகாக்கப்படும், சமூகத்தில் கௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழ்வீர்கள்.

குடும்பஸ்தர்கட்கு 2-ல் செவ்வாய் பலத்துடன் இருப்பதால் எவ்விதகுறையும் ஏற்படாது. சனீஸ்வரன் உச்சமடைவதால் குடும்ப உயர்ச்சியைத்தரும். மங்கள கருமங்கள் கொண்டாட்டங்

களில் கலந்து கொள்வீர்கள். 12-ல் வியாழன் இருப்பதால் புத்திரசுகம் குறைவாகவிருக்கும்.

வியாபாரிகட்கு சற்றும் எதிர்பாராத வகையில் திருப்பங்கள் ஏற்படும். வங்கிவசதிகள் குறைவாகவிருப்பினும் முதலீடுகள் போதிய இலாபத்தைத் தரும். பங்காளிகள் சற்று அவதானமாக இருக்கவேண்டும். ஏற்றுமதி வியாபாரம் தாராளமாக நடைபெறும்.

உத்தியோகத்தர்கட்கு ஜன்மராசிச் சூரியன் தொல்லைகளை அறவே நீக்கிவிடுவான். பழைய பாக்கிகள் வந்துசேரும். சகாக்கள், மேலதிகாரிகள் யாராயினும் உங்கள் விருப்பத்திற்கு மாறுக நடக்கமாட்டார்கள். மாற்றங்கள் மகிழ்ச்சிக் குரியனவாயிருக்கும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 11-ல் உச்சமடைவதால் எல்லாம் நல்லபடியாக நடைபெறும். தகராறுகள் தேன்றினும் முடிவு உங்களுக்கு சாதகமாகவே இருக்கும். களைகளின் தொல்லையோ நோய்களின் தொல்லையோ ஏற்படாது. பயிர்கள் செழித்து வளர்ந்து உங்களை களிப்பிலாழ்த்தும்.

தொழிலாளர்களுக்கு நீண்டகால கனவுகள் நனவாகும். ஊதியத்தில் குறைவேற்படாது. தொழிற்சாலையில் வேலைப்பளு அதிகரிக்கும். சகாக்களின் உதவியுடன் புதுப்புது தொழில் வாய்ப்புகளை தேடிக்கொள்ளலாம். கூட்டுறவுத் தொழில் விருத்தியடையும்,

மாணவர்கட்கு புதன், சுக்கிரன் ஜன்மராசியில் திக்பலம் பெறுவதால் கல்வியில் முன்னேற்றம் கிட்டும். உயர்கல்வியில் நற்பலன் கிடைக்கும். கலை விளையாட்டுக்களிலீடுபட்டு சந்தோஷமடைவீர்கள். தொழில் வாய்ப்புகள் பண உதவிகள் கிடைக்கும்.

பெண்களுக்கு காதல் கிரகம் சுக்கிரன் லௌகீக வாழ்க்கைக்கு வழிகோலுவான். வாக்குக் கலகங்களை வெற்றி கொள்வர். தடைப்பட்ட விவாகம் சனீஸ்வரன் கிருபையால் நடைபெறும். கணவனின் முன்னேற்றத்திலிருந்த தடைகள் நீங்கிடும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 27 பி.ப, 28, 29. மு. ப; ஜன 7. 8, 9 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்; டிச 31 பி. ப.
ஜன 1, 2 மு.ப., 9 பி. ப, 10, 11 மு. ப.



# மகரம்

உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2-ம்கால்

இவ்விராசியைச் சேர்ந்தவர்கட்கு சூரியன் 12 இல் லோகமூர்த்தியாக வலம் வருவது மிகவும் துரதிஷ்டமே. வியாழபகவான் லாபஸ்தானத்தில் இருந்தாலும் அதிகசுகம் ஏற்படாது. இனசனங்களுடன் உறவுகள் பாதிப்படையும். அரசியல் தலையீடு காரணமாக தொழில் ரீதியான அந்தஸ்து பாதிக்கப்படலாம். ஜன்ம ராசிச் செவ்வாய் அவசரப்பட்டு காரியங்களை கெடுத்துவிடும். தேகசுகமும் நன்ருக இருக்காது. பெற்ரேர் வழியால் கவலைகள் அதிகரிக்கும். சயனசுகக்குறைவால் மனநிம்மதி குறைந்துகொண்டு போகும். தூரதேச உறவுகள் அதிகம் நன்மை பயப்பனவாகவில்லை.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் உச்சமாகவிருப்பினும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவது கடினம், வெளியாரின் நற்கருமங்களிஞல் செலவுகள் அதிகரிக்கும். புத்திர லாபங்கள் இல்லாவிடினும் தொல்லைகள் ஏற்படாது. உங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றுவதில் பணச்செலவுகள் அதிகரிக்கும்.

வியாபாரிகட்கு மாதமுற்பகுதியில் சிறிது அவதானந் தேவை. முதலீடுகள் இலாபத்தைத் தரமாட்டா. கடன்பட்டு வியாபாரத்தை வளர்க்க முயலாதீர்கள். வெளிநாட்டு தொடர்புகளில் தடைகள் உண்டாகும். வங்கி உதவிகள் குன்றும். கள்ள மார்க்கட் விலைகள் இறங்கும்.

உத்தியோகத்தர்கட்கு கவலைகள் நிறைந்த மாதம். 12 இல் உள்ள அரசியல் கிரகம் பல சிக்கல்களை உருவாக்கும். வசதிகள் குறையும். மாற்றங்கள் நன்மை தராது. இரகசிய எதிர்ப்புகள் கடமையைச் செய்யவிடாது தடைபண்ணும். இதுவரை காலமும் இருந்த கம்பீரம் குறைவதால் சோர்ந்து போவீர்கள்.

விவசாயிகட்கு சனி 10 இல் இருப்பதால் பயிர் வளர்ச்சியில் பாதிப்பில்லை. பணப்புழக்கம்

சற்று குறைவாகவே இருக்கும். காணித்தகராறுகள் தொல்லைகளைத் தரும்; மனச்சோர்வு ஏற்பட்டாலும் ஊக்கத்தைக் கைவிடாதீர்கள்.

தொழிலாளர்கட்கு தொழிலாளி சனி 10-ல் இருப்பதால் அந்தஸ்து காப்பாற்றப்படும். 11-ல் யுரேனஸ் இருப்பதால் சகாக்களை அதிகம் நம்பாதிருத்தல் நன்று. இரகசியமாகத் தொழில் வாய்ப்புகளைக் கெடுத்து விடுவார்கள். கூட்டுறவுத் தொழில், பங்குத் தொழில் ஆகியவை நன்மை தரா.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குறைவாக இருக்கும், தூரதேசக்கல்வியாளருக்கு தடங்கல்கள் ஏற்படும்- தொழில் தேடலில் பலவித கஷ்டங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும். மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பின் மாதபிற்பகுதியில் நன்மையடையலாம்.

பெண்கள் எதற்கெடுத்தாலும் கவலைப்படும் மாதம். காதலில் தோல்வியடைவீர்கள். விவாகப் பேச்சுக்களில் வெற்றி கிடையாது. குடும்பஸ்தர்கள் கணவனின் கஷ்டநஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதுதான். தொழில் பார்க்கும் பெண்களின் சுயமரியதையைச் சோதிக்கும் காலமிது.

அதிஷ்ட நாட்கள்: டிச 29 பி.ப, 30, 31 மு. ப.
ஜன 9 பி. ப., 10, 11மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: டிச 16, 17
ஜன 3,4 மு.ப, 11பி.ப.12,13




அவிட்டம், 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2 ,3-ம் கால்

கும்பராசியில் ஜனித்தவர்களுக்கு சூரிய பகவான் சுவர்ணமூர்த்தியாக 11-ல் இராஜ பவனி வந்துகொண்டிருப்பதால் என்றுமில்லாதவாறு களிப்பெய்தும் வகையில் கருமங்கள் நடைபெறும். 10-ம் இடத்து வியாழன் வாக்கு, அந்தஸ்து, புகழ் என்பன கிடைக்கவழி செய்வார். தேகசுகத்தையிட்டு கவலைப்பட வேண்டியதில்லை. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். இனபந்துக்கள் சேர்க்கையால் பொருள் வரவிற்கும் தூரதேச நன்மைகள் எதிர்பார்த்த வண்ணம் கிடைக்கும். வேலைப்பளு அதிகரிப்பால் நிம்மதி சற்றுக்குறைவாக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு அங்கத்தவர்களிடையே உறவு வலுப்பெறும். புத்திரசுகங்கள், முன்னேற்றங்கள் மகிழ்ச்சியூட்டும். குதூகலமாக இல்லறவாழ்க்கை நடைபெறும். நற்கருமங்கள் கைகூடும். வாகனுதி, அலங்காரவகைகளில் சந்தோஷத்திற்கான அறிகுறிகள் உண்டு.

வியாபாரிகட்கு புதன் 11-ல் சுக்கிரனுடன் சேர்க்கை பெற்றிருப்பதால் எல்லாவித வியாபாரமும் இனிதே நடைபெறும். வெளிநாட்டு முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். வங்கி உதவிகள் மூலம் வியாபார விஸ்தரிப்பை மேற்கொள்ளலாம். கள்ளமார்கட் வியாபாரத்திலும் லாபத்தை எதிர்பார்க்கலாம். வியாபாரஸ்தலங்களை மாற்ற உகந்த காலம்.

உத்தியோகஸ்தர்கள் எதையும் சாதித்துக் கொள்ள முடியும்; மேலிடத்தில் செல்வாக்கு வளர்ச்சியடையும். சகாக்கள் ஒத்துழைப்பர் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் ஏற்படலாம். கடன் தொல்லைகள் குறையும்.

விவசாயிகட்கு 9-ல் சனி சூரியனுக்கு நற்பார்வையிலிருப்பதால் பயிர்ச்செய்கையில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். வழக்குகள் சாதகமாக முடிவடையும். பயிர்செய்கையில் எவ்வகையில் முதலீடுகள் மேற்கொண்டாலும் இலாபத்தைப் பெறலாம்.

தொழிலாளர்கட்கு செலவினங்கள் கட்டுக்கடங்கியிருக்கும். தொழில் புது உற்சாகம் தோன்றும். நெருங்கிப் பழகுபவர்களால் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். சுயதொழில் செய்வோர் சமுதாயத்தில் புகழ் அடைவார்கள். வியாழனின் உதவியால் மேலும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்.

மாணவர்கட்கு கல்வியில் வசதிகள் கிடைக்கும். நேர்முகப்பரீட்சையில் சாதகமான முடிவை எதிர்பார்க்கலாம். தூரதேசக்கல்வியாளர்கள் நன்மை அடைவர். அறிவாளிகளின் உதவிகள் ஒத்தாசையுடன் கருமத்தை முடிக்கலாம். விளையாட்டுத்துறையில் புகழீட்டுவீர்கள்.

(25-ம் பக்கம் பார்க்க)

# ஜன்ம இலக்கினம்

அ. சிவசுப்பிரமணியம், B.A.(Lond)
மல்லாகம்

## கும்பம்

விண்ணுலகிலுள்ள இராசி மண்டலத்தில் உயர்ந்து மிகப் புனிதத்தன்மை பெற்று இருக்கும் கும்பராசி சிருஷ்டி கர்த்தாவாகிய நான்முகக் கடவுளின் ஜன்மலக்கினமான மேட ராசிக்குப் பதினேராம் ராசியாக மிளிர்கிறது. இதைச் சோதிடர்கள் பெரும்பாலும் பதினேராம் வீடெனப் பகர்வர். ராசி ஜீவாதாரப் பொருள். வீடு ஜடப் பொருள். வீடுகள் மண்ணுலகில் சோதிடர்களால் படைக்கப்படுவன. மேடம் முதல் மீனம் ஈருக ஒழுங்குப்பிரகாரம் அமைந்துள்ள ராசிகள் அவற்ேறாடு ஒத்த வகையில் பொருந்தும் வீடுகளுடன் விளையாடுகின்றன. ஒரு ராசி நிர்ணயிக்கும் சக்தி அதை ஒத்த வீட்டில் பெரும்பாலும் பிரதிபலிக்கும் என்பர், ஒரு ராசிக்கும் அதை ஒத்த வீட்டுக்குமிடையில் ஆழ்ந்த அகன்ற நுண்ணிய சம்பந்தம் உண்டு. ஒரு வீடு என்ன யோக்கியாம்சங்களைப் பெறுகிறதென்று நாம் அறியவேண்டுமானல் நம் சிந்தனைசக்தியைத் தட்டி எழுப்பித் துருவி ஆராய வேண்டும். இந்த உறவு மட்டத்தில் ஒவ்வொரு ராசியின் முக்கியத்துவமும், தனிப்பட்ட விசேஷ இயல்புகளும் அதன் அதன் வீடுகளாக வரும்பொழுது சில சமயங்களில் கிரக சம்பந்தங்களால் சிறு மாற்றங்கள் ஏற்படினும், பெரும்பாலும் அதன் அடிப்படைக் கொள்கைகள் கண்டிதமாகப் பிரதிபலிக்கும், பத்தாம் வீடாக அமையும் மகர ராசியும், பதினேராம் வீடாக அமையும் கும்ப ராசியும் இராசி மண்டலத்தின் அதிபதியான சூரியபகவானின் மகன் சனீஸ்வரனின் ராசிகள். சனீஸ்வரனின் எதிர்மறை ராசியான மகரம் (Negative Sign) அவரின் சொந்த ராசி எனவும், அதை அடுத்து வரும் அவரின் உடன்பாட்டு ராசியான கும்பம் அவரின் பலம் வாய்ந்த உல்லாச ராசியான மூலத்திரிகோண ராசி (Joy Sign) எனவும் கொள்ளப்படுகிறது. இவ் இரு ராசிகளும் ஒரு விந்தையான முறையில் அடுத்து வந்த காரணமும், அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளும் சுருக்கமாக 1981ம் ஆண்டு சோதிட மலரில் ஆராயப்பட்டன. தத்துவஞான ராசிகளான மகர, கும்ப ராசிகள் சுகபோக லௌகீகப் பற்ேறுடு ஞானமார்க்கப் பற்றுமுடையவை யென்றும், அவை படாடோப செல்வத்தையும் செல்வாக்கையும் நல்கும் வீரிய பாம்பாகிய ராகுபகவானின் எதிர்ப்புறத்தில் சஞ்சரித்துக் கர்மத் தொடர்புகளைப் புசிப்பிக்கும் ஞானகாரகனுன கேது பகவானின் செல்வாக்குக்குள் அமையும் பின் ஆறு ராசிகளுள் மிக மேம்பாடுடையவையென்றும் கூறற்பாலதாம்.

மகர ராசியோடு சம்பந்தப்பட்டிருக்கும் அடிப்படைக் கொள்கைகளான சுயநலப் பற்றுடன் கருமமாற்றிப் பொருள் தேடலும், கடின உழைப்பும் அதிகார ஆட்சியும், ஆதிக்கமும் அதனுடன் ஒத்திருக்கின்ற கர்மஸ்தானம எனப்படும் பத்தாம் வீட்டின் ஆதாரமான சிறப்பியல்புகளாக அமைகின்றன. கருமம் நற்கருமம், தீயகருமம் என இரண்டு வகைப்படும். மகரராசி இவ்விரு கருமங்களையும் உள்ளடக்கி உள்ளது. சாதுவான மான்தலை முன்னதாகவும் புல்வாயுடைய முதலை பின்னதாகவும் படைக்கப்பட்ட நீர்வாழ் ஐந்துவான மகரராசியின் குறிப்புச் சித்திரத்தில் அது தனது தலைப்பகுதியை நீர்மட்டத்திற்கு மேல் உயர்த்திப் பாசாங்கு செய்வது, ஏனைய நீர்வாழ் ஐந்துக்களுக்கு மேலாக அது நின்று சுயநலப்பித்துடன் ஆதிக்கம் செலுத்துவதையே நன்கு புலப்படுத்தும். இதே போன்று, மற்ற ராசிகளிலும் பார்க்கப் பண்பாடான யோக்கியாம்சங்களையும் தெய்வீகத் தன்மையையும் நல்கும் மீன ராசி சோதிட சாஸ்திரக் கொள்கைப்படி விரயம், சயனசுகபோகம், மோக்ஷம் ஆகியவற்றைக் குறிக்கும் பன்னிரண்டாம் வீட்டுடன் இணைக்கப்படுகின்றது- இவ்வாருக இராசிகளும் வீடுகளும் தொடர்புடையனவாகவும், ஒன்ேறடொன்று சேர்ந்து பரிபூரணமடைவதாகவும் காணப்படும். ஆகவே, ராசிக்கும் வீட்டுக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பு கும்பராசியைப் பொறுத்த அளவில்

எவ்வாறு செயல்படுகிறதென்பதையும்; அதன் அடிப்படை யோக்கியாம்சங்கள் என்னவென்பதையும், அதன் ஒத்த பகுதியான பதினேராம் வீட்டின் போக்கை அது எவ்வாறு தீர்மானிக்கிறதென்பதையும் ஆராய்வோம். மகர, கும்ப ராசிகள் தேவகுருவாகிய வியாழபகவானின் ராசிகளான தனுசு மீனம் ஆகிய இரு ராசிகளுக்கிடையில் அடங்கி அவரின் பாதுகாப்பையும், செல்வாக்கையும் பெறுபவரெனினும், மகரராசியிலும் பார்க்க கும்பராசியே வியாழபகவானின் தொடர்பையும் ஒத்துழைப்பையும் நேரடியாகப் பெறுகிறது. வியாழபகவானின் சிறப்பியல்புகள் கும்பராசியில் அமைவதாலும், கும்பராசியின் இறுதி 10 பாகைகளும் வியாழனின் நட்சத்திரமான பூரட்டாதி 1ம், 2ம், 3ம் பாதங்களை உள்ளடக்கி மிளிர்வதாலும், மீனராசி கும்பராசிக்கு அடுத்து வந்து வியாழனின் துரிதமான அதிர்வைப் பெறுவதாலும் சோதிடர்கள் கும்பராசி வியாழ பகவானின் பூரண செல்வாக்கைப் பெறுகிறதென்பர். வியாழபகவான் கும்பத்தில் நிற்கில், அவர்களது உச்ச ராசியான கற்கடகத்தில் நின்று நல்கும் உச்ச பலனையே தருவரென்ற வராஹமிஹிரரின் கூற்றும் இதை வலுப்படுத்தும்.

கும்பராசி மக்களை பிரகிருதியின் திருவிளையாடல்களில் சற்று நிதானமாக ஈடுபாடு கொள்ளச் செய்து, சிற்றின்பத்திலும், சுகபோக வாழ்விலும் மிதமான இச்சை வைத்தும் பிரபஞ்சத்தில் பெரும்பாலும் உழலவைத்தாலும் அவர்களை நன்னெறிப்படுத்த அவர்களிடம் மறைந்து கிடக்கும் மேலான பண்புகளை விஸ்தரிப்பதற்கு தூண்டுதல்களை ஏற்படுத்தி விழிப்புணர்ச்சியைத் தக்க சமயத்தில் உண்டாக்குகிறது. மக்களின் விதியை நிர்ணயிப்பதும், விதியினுல் அவர்களின் சுகபோக வாழ்வு மிக அனுகூலமாக அமைவதும், அன்றேல் சிதறடித்துப் போவதும், கும்பராசியின் அதிபதியான சனீஸ்வரனின் உயர்ந்த அதிகாரத்திலிருப்பதால் அவர் மாபெரும் சக்தி வாய்ந்தவராவர். இவர் பல தங்குதடைகள், கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்கள் மூலமே மக்களைக் கடுமையாக வருத்திச் ''சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும்படி'' செயலாற்றுகிருர். ஆகவே ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு சட்டத்தில் ஏதோ ஒருவித ஆபத்தான நிலை ஏற்படஇடமுண்டு. இடுக்கண்களும் இன்னல்களும் பெரியனவாகத் தோன்றி அவரைத் துன்புறுத்தும் போது அவர் என்ன செய்வதென்று திகைக்கிருர். இந்த அதிர்ச்சியின் பயனுல் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. அவர் இதுகாலும் வாழ்ந்த லௌகீக சுகபோக வாழ்வைப்பற்றி நேர்மையாக ஆழ்ந்து சிந்திக்க அதுவே உற்ற தருணமாக அமைகிறது. அதிவிரைவாக மறைந்து போகக்கூடியனவான சரீரம், செல்வம், செல்வாக்கு, மனைவி, மக்கள் சுகபோகம், அந்தஸ்து, அதிகாரம், புகழ், காணி, பூமி, வீடு, வாகனம் ஆகியவற்றுல் அதிக ஆசை கொண்டு அவற்றுல் அடையும் இன்பத்தையே தாம் பெரிதும் நாடி அல்லும் பகலும் ஓடினதாகவும், சகல போகம் பொருள்களைப் பெற்றும் தான் ஒன்றும் அற்றவனுகவே தோன்றுவதாகவும், தான் நாடி ஓடியன யாவும் பொய்யானவையென்றும், சாயல் பொருள்களென்றும், உண்மைப் பொருளைத் தான் அடைய இதுவரை எத்தனிக்கவில்லை என்றும் நன்கு உணர்ந்து கொள்கிருர். புனிதத்தன்மை வாய்ந்த கும்பராசி இவ்வாருன விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மக்களிடம் மறைந்து கிடக்கிற மேலான பண்பாடுகளான தூய இனிய உணர்ச்சிகள், அன்பு, அறம், அனுதாபம், கருணையோடு கூடிய பொது நலத்தொண்டு, ஆன்மீக ஞானம், கடவுள் பற்று ஆகியவற்றைப் பெரிதும் பொலியச் செய்து, அறிவு சொரூபியாக்கி ஆத்மபேதத்தைப் படிப்படியாக மேலோங்கச் செய்கிறது. இதனுல் மக்கள் தம்மைப் புதுப்பித்தும், தம் இயல்புகளை மாற்றியும், புதிய ஆற்றல்களை அடைந்தும் நெறியான வாழ்வு வாழ்ந்தும் மேலோர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்கின்றனர். 'நான்' 'எனது' என்ற போக்கையும், சுயநலப்பற்றையும் முற்றும் விலக்கி ஆன்மீகம், பொதுநலம் ஆகியவற்றைச் சிப்பாறக ஏற்றுக்கொள்வதே கும்ப ராசியின் குறிப்புச் சித்திரத்தின் புனிதமான கருத்தாகும்.

கும்பராசியோடு சம்பந்தப்பட்டிருக்கும் மேற்கூறிய அடிப்படைக் கொள்கைகளான திடமான நம்பிக்கைகளின் நிறைவேற்றம், ஆன்மலாபம், ஞானம், கருணையோடு கூடிய பொதுநலத்தொண்டு ஆகியவை அதனுடன் ஒத்திருக்கின்ற லாபஸ்தானமெனப் பகரப்படும் பதினேராம் வீட்டின் ஆதாரமான சிறப்பியல்புகளாக அமைகின்றன. பதினேராம் வீடு லாபம், ஆயம், ஆகமம், திடமான நம்பிக்கைகளின் நிறைவேற்றம், ஜெயம், ஞானம், தோழமை, உதாரண குணமுள்ள மனிதத் தொடர்பு ஆகியவற்றைக் குறிக்கும். சான்றோர் பதினேராம் வீட்டை 'சர்வாபீஷ்ட ஸ்தானம்'' என்பர். இது நிலையான சகல நம்பிக்கை

களையும் அடைந்து வெற்றி பெறல் எனப் பொருள் படும். கும்பராசியுடன் சம்பந்தப்பட்டிருக்கும் 'ஆன்மீக லாபத்தைப்' பதினேராம் வீடு பண லாபமாகக் கருதுகிறதென்று கூற வேண்டும். பணலாபம் சித்திக்காததால் லெளகீகர்கள் கும்ப லக்கினத்தைத் துரதிஷ்ட ராசியாகக் கருதுகின்றனர். உலக வாழ்வுக்கு இன்று பணம் இன்றியமையாத பொருளாகக் கருதப்படுகிறது. அதைச் சுயநலப்பற்றுடன் சம்பாதிப்பது தீது. கும்பராசி இதற்கு மாருகவே பெரும்பாலும் செயற்படும். ஐம்புலவின்பம் நுகர்தற்காகப் பணம் தேடலை நன்மக்கள் ஒருபோதும் விரும்பார். பொருளைக் குவித்து வைத்தலில் இன்பம் காண்பவர் கயவர் எனப்படுவர். கயவரெனப் படுபவர் இழிந்த ஒழுக்கமுடையவர். குணத்தாலும், குலத்தாலும், அறிவாலும், ஒழுக்கத்தாலும் சிறந்து துலங்கும் தலைவன் ஒருவன் தன் னுயிரிலும் இனிய தலைவியைப் பிரியும்போது செல்வம் சம்பாதிக்கும் நோக்கமும் அவன் பிரிவுக்கு ஒரு காரணமாக அமையுமெனலாம். பொருள் வயிற் பிரிந்தழியும் இன்பம் நுகர்தற்கும் பொருள் இன்றியமையாததென்னும் இழிவான எண்ணத்தோடு பண்பாடுடைய தமிழ்த் தலைவன் பிரியான். இவ்வுண்மையைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ நன்ருக வற்புறுத்துகின்ருர். தருமம் செய்தலில் செல்வமெல்லாம் விரயமடைந்த காலை, இன்னும் தருமத்தைத் தொடர்ந்து செய்வதற்காகவே தலைவன் செல்வம் தேடப் பிரிவான் என்பது புலவர் கருத்து:

(தொடரும்)

# சனிப் பெயர்ச்சியின் பலன்கள்

**மாத்தளை — அருணேசர்**

சனிப்பெயர்ச்சிபற்றிய திகதிகளைப்பற்றியும் பலாபலன்களைப்பற்றியும் பலபலவிதமாகச் சோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனல் ஒவ்வொரு இராசியிலும் 2½ ஆண்டுகளாக 7½ ஆண்டுகள் சஞ்சரிக்கும் இச்சனி அக்காலங்களில் செய்யும் நன்மை தீமைகளைப்பற்றிய விபரம் எவரும் சொல்லவில்லை. அதுபற்றிச் சில விபரங்களை அடியில் காண்க.

சனி சஞ்சரிக்கும் 7½ ஆண்டுகள் 2700 நாட்களாகக் கொண்டன. ஏழரைநாட்டான் தொடர்ந்தது முதல் 100 நாட்கள் (3 மாதம் 10 நாட்கள்) சிரசு முதல் கண்டம் வரை இவர் பீடிப்பார்.

பின்னர் 400 நாட்கள் (1 வருடம் 1 மாதம், 10 நாட்கள்) வரை வலது புறத்தில் இருப்பார் அந்தச் சமயத்தில் ஏழரைச்சனி கொடிய பலனை தவிர்த்து சுப பலன்களையே தருவார்.

அதன் பின் 600 நாட்கள் (1வருடம் 8மாதம்) பாதத்தில் இருப்பார். அந்த நேரம் ஓரிடத்தில் நிலையாயிராமல் அலைச்சலில் திரியவைப்பார்.

அதற்குப் பிறகு 500 நாட்கள் (1 வருடம் 4 மாதம் 20 நாட்கள்) இருதயமாகிய மார்பிலிருப்பார். அந்த சமயத்தில் எதிர்பாராத பணவரவும் உற்சாகமும் காணப்படும்.

பின்பு 400 நாட்கள் (1 வருடம் 1 மாதம் 10 நாள்) இடது புஜத்தில் உலவுவார். அந்தச் சமயத்தில் மனக்கிலேசம், தொல்லைகள், அமைதிக் குறைவு இவை தோன்றும்.

அடுத்து வரும் 300 நாட்கள் (10 மாதம்) மறுபடியும் சிரசில் இருப்பார். அதனல் பண வரவு, கெளரவம் கிடைக்கும்.

அதற்கப்புறம் 200 நாட்கள் (6 மாதம் 20 நாள்) கண்களில் சஞ்சரிப்பார். இதனல் சுகம் மிகுதியாகவும் உற்சாகமும் உண்டாகும்.

பின் 200 நாட்கள் (6 மாதம் 20 நாள்) வயிற்றில் சஞ்சரிப்பார். இதனல் துக்கமும் வேதனையும் உண்டாகும்.

தொடக்கத்தில் 100 நாட்களும், கடைசியில் 200 நாட்களும் கொடிய நாட்களாகும். இதற்குத் தக்க சாந்தி செய்துகொள்வது மிக்க அவசியமாகும் என்பது சோதிட நூல்களின் விதி.

உங்கள் இல்லத்தின் பொக்கிஷம்

**திருக்கணித பஞ்சாங்கம்**

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வே. சின்னத்துரை நல்லூர்

31-5-81 ல் யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் த. வி. கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மாநகர சபை முதல்வர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. அதன் பின்பு அங்கு காவல் புரியவந்த பொலீசாரை இனம் தெரியாத நபர்கள் சுட்டுவிட்டு மறைந்தனர். இத்துடன் கூட்டமும் கலைந்தது. இதைத் தொடர்ந்து தேர்தலுக்காக கொழும்பிலிருந்து விசேடமாகக் கொண்டுவரப்பட்ட பொலீசாரும், ஏனைய பொலீசாரும் தலத்துக்கு விரைந்து வந்து அப்பகுதி மக்களையும் அவர்களுடைய உடமைகளையும் தாக்கி நாசப்படுத்தினார்கள்.

7-5-81 வரையும் யாழ்ப்பாணச் சந்தையும், கடைதெருவும் அடித்து நொருக்கி சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டது. கடைகள் எரியூட்டப்பட்டன. சுன்னாகச் சந்தை எரியூட்டப்பட்டது. கண்டகண்டபடி காரணம் எதுவுமின்றி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சிங்களப் பொலீசாரும் இராணுவத்தினரும் கட்டுக்கடங்காத காடைத்தனத்தையும் காட்டுமிராண்டித் தனத்தையும் கட்டவிழ்த்து விட்டார்கள். இப் பொலீஸ் பயங்கரவாதம் உச்சக் கட்டத்தில் வெறிபிடித்தாடியது. யாழ்ப்பாண நகரம் எரியூட்டப்பட்டது. கடைகள், வீடுகள், எரிக்கப்பட்டு சூறையாடப்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தமிழ்த் தினசரியான ஈழநாடு அலுவலகம் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாண நூலகம் தீயிடப்பட்டது. பல இடங்களில் பலர் காரணம் எதுவுமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகம் தரைமட்டமாக்கப்பட்டது. யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் வீடும், ஜீப்பும், காரும் சம்பூர்ணமாக எரிக்கப்பட்டு விட்டதுடன் அவரைக் கொலை செய்யவும் எத்தனித்தனர். ஆனால் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இத்திருவிளையாடல்கள் நடக்கும்போது உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் அனைவரும், மந்திரிகளும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். அப்போதிருந்த கிரக நிலையைப் பார்த்தால் எல்லாம் புரிந்துவிடும். தமிழர்களின் இலக்கினாதிபதி செவ்வாய். சிங்களவர்களின் இலக்கினாதிபதி வெள்ளி, இவ்விரு கிரகங்களும் ஒன்றுக்கொன்று 2 — 12 நிலையில் வரும்பொழுதில் சூரியனும் செவ்வாயும் கெட்ட பார்வையில் நிற்கும்பொழுதும் இப்படிச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| சந் 29 | | பு 7 சூ 21 கே 14 | வெ 15 |
| செ 7 | 5-6-56 | | |
| | காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் | | வி 1 |
| | சனி 5 ரா 14 | | |

இங்கு வெ — செ 120°க்கு மேல் கெட்டபார்வை

| | | | |
|---|---|---|---|
| வெ 29 | கே 8 பு 22 | சூ 10 | |
| செ 27 | 30-5-58 | | |
| | இனக்கலவரம் | | |
| சனி 0 | | சந் 5 ரா 8 | வி 29 |

| | | | |
|---|---|---|---|
| கே 24 | | செ 26 | வி 5 வெ 22 |
| | 16-8-77 | | சனி 28 |
| | தேர்தலின் பின் இனக்கலவரம் | | சூ 0 பு 25 சந் 19 |
| | | | ரா 24 |

| | | | |
|---|---|---|---|
| | | செ 17 | வெ 12 சூ 25 |
| கே 17 | 11-7-79 | | வி 19 பு 19 |
| சந் 18 | அரச பயங்கரவாதம் | | சனி 16 ரா 17 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | சந் 18 | செ 3 சூ 16 | வெ 0 பு 8 |
| | 31-5-81 | | ரா 11 |
| கே 11 | அரச பயங்கரவாதம் | | |
| | | | வி 6 சனி 9 |

| | | | |
|---|---|---|---|
| | | செ 6 சூ 10 | சந் 18 வெ 5 பு 10 |
| | 4-6-81 | | ரா 10 |
| கே 10 | அபிவிருத்திச் சபை தேர்தல் | | |
| | | | வி 7 சனி 9 |

4-6-81 ல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் நடந்தேறியதும் யாழ்ப்பாணத்தில் தேர்தல் சரிவர நடத்தப்படவில்லை, ஆதலால் முடிவுகள் வர நாள் சென்றது. இத்தேர்தல்களில் தமிழ் ஊர்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னர், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை த. வி. கூட்டணியினரே கைப்பற்றினர்கள்.

10-6-81ல் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தது. அத்தோடு அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றையும் கொண்டுவந்தது.

17-7-81 தமிழீழத்தின் தென்பகுதியில் தமிழர் தாக்கப்பட்டதற்கு யாழ். மாணவர்கள் எதிர்ப்பியக்கம் நடத்தினர்.

23-7-81 தமிழர் விடுதலைக் கூட்டணியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாதிக்காது அரசு எதிர்க்கட்சித் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அதையே முதலாக விவாதத்திற்கு எடுத்தது. அத்தீர்மானத்தில் அரசாங்க உறுப்பினர் எவரும் சுதந்திரமாகப் பேசலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. திரு. நெவில் பர்னந்து அத் தீர்மானத்தை பிரேரித்தார். திரு. அமிர்தலிங்கம் இது சம்பந்தமாக ஓர் விளக்கமளிக்கக் கோரினர். அது மறுக்கப்படவே கூட்டணியினர் வெளிநடப்புச் செய்தனர். இத்தீர்மானத்தில் பேசிய அத்தனை அரசாங்க உறுப்பினர்களும் அஹிம்சையைப் போதிக்கும் புத்தபெருமானின் கொள்கைக்கெதிராக, மாறாக ஹிம்சை போதிக்கப்பட்டது. அமிர்தலிங்கத்தை தூக்கவேண்டும், கொல்ல வேண்டும், அவருக்கெதிராக என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது.

24-7-81 இத்தீர்மானத்தில் அரசு தரப்பு மந்திரியான திரு. தொண்டமான் கூறியது:- இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு என்று அரசமைப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆனல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அரசமைப்பில் ஒற்றையாட்சியென்று இருப்பதை மாற்றலாம். மக்கள் அதைத்தான் விரும்புவார்கள் என்றால், நீங்கள் அதை நசுக்கித் தடுத்துவிட முடியாது. சிறுபான்மையினர் பிரச்சினை எல்லா நாடுகளிலும் தான் இருக்கிறது. இந்தப் பிரச்சினையால்தான் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிந்தன. திரு. அமிர்தலிங்கத்தின் நடவடிக்கைகளை துரோகத்தனமானதென்றோ சட்ட விரோதமானதென்றோ கூற முடியாது. அரசியலமைப்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது, அரசியல் அமைப்பைத் திருத்தினல் தமிழ் ஈழக் கோரிக்கை சட்டப்படி சரியானவை ஆகிவிடும்.

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவிக்கு வந்தது முதல் இரண்டு இனங்களுக்கிடையேயும் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறர். தமிழர் விடுதலை கூட்டணி முன்னர் எத்தகைய கொள்கைகளைக் கொண்டிருந்த போதிலும், இப்போது அவர்கள் தமது நிலையைத் தளர்த்திக் கொண்டுள்ளனர். அதனல்தான் தனிநாடு கேட்ட அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக்கொண்டதுடன்

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலிலும் போட்டியிட்டனர். இந்த நிலையில் ஜனாதிபதியின் முயற்சிகளையும் நல்லெண்ணத்தையும் சாத்தியப்படுத்த இப்பிரேரணை எந்தளவில் உதவும்? இதை சிந்தியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டினை மட்டுமே ஏற்றுக்கொள்வது என்ற நிலையிலிருந்தால் அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றிருக்க மாட்டார்கள். அவர்கள் போட்டியிட்ட ஆறு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வெற்றியும் பெற்றுள்ளனர். ஆகவே தமிழ் மக்களும் கூட்டணியை ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முயற்சிகளுக்கு ஐ. தே. கட்சி முன்னுரிமை வழங்குகிறது. ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிகளை நாம் மதிக்க வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி உங்களுடன் ஒத்துழைக்க முன்வரும்போது தங்கள் தீவிர நிலையைத் தளர்த்திக்கொண்டிருக்கும்போது அதைக் கெடுத்து விடாதீர்கள்.

தமிழர்களுக்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்று கூறிக்கொண்டே தமிழர்களுக்கு எதிராக துவேஷம் கக்குகிறீர்கள். கண்களை மூடிக்கொண்டால் உலகமே இருண்டுவிட்டது என்று எண்ணி விடாதீர்கள். இன்றைய அரசியலமைப்பின்படி தனிநாடு கோருவது சட்ட விரோதமானதல்ல. கருத்து வெளியிடும் சுதந்திரத்தை அரசியல் சுதந்திரத்தை அரசியல் சட்டத்தில் வழங்கிவிட்டு மறுபுறம் அதைத் தடைசெய்யப் பார்க்கின்றீர்கள். அப்படியானால் தனிநாடு கோருவது குற்றம் என்று அரசியல் சட்டத்தை மூன்றில் இரண்டு வாக்கால் திருத்துங்கள். நானும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்தவன்தான். இ. தொ. கா. வினது கொள்கை தெளிவானது. தனிநாடு கோரிக்கையைக் கூட்டணி முன்வைத்த போது இ. தொ. கா. அதை ஆதரிக்கவில்லை. அதற்காக அவர்கள் என்னை கூட்டணியிலிருந்து வெளியேற்றவில்லை. இவ்வாறுதான் அரசியலில் நாம் நடந்து கொண்டோம். யாரையும் ஆதரித்து நான் இங்கு பேசவரவில்லை — ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைக்காகவுமே வாதாடுகிறேன். ஜனாதிபதியின் பொறுப்பிலேயே தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை விட்டுவிடுவதே நல்லது. தேசிய ஒற்றுமையே எமது குறிக்கோள்.

27-7-81 ஆனைக்கோட்டைப் போலீஸ் நிலையம் தாக்கப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதில் சில பொலிசார் கொல்லப்பட்டனர். இதையடுத்து பளை, சங்கானை, ஆனைக்கோட்டை, கோப்பாய், குருநகர், நெடுந்தீவு பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன. இங்கெல்லாம் இராணுவம் குடியேறின. மேற்படி வன்செயல்களை கூட்டணி கண்டித்தது. இந்த நிகழ்ச்சியின்போது முன் கூறியதுபோல் செவ்வாயும் சூரியனும் இரண்டு பன்னிரண்டில் நிற்பதைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | செ பு |
| | 27-7-81 | | சூ ரா |
| கே | | | வெ |
| | | | வி சனி |

5-8-81 கிழக்கு மாகாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் தாக்குதல்கள் நடைபெற்றன. தமிழர்கள் பலர் அகதிகளாக்கப்பட்டார்கள். இரத்தினபுரியிலும் பரவலாக நாடெங்கிலும் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | செ |
| | 5-8-81 | | சூ பு ரா |
| கே | | | வெ |
| | | | சந் வி சனி |

முன்கூறியதுபோல 5-8-81 நிகழ்ச்சிக்கும் செவ்வாயும் சூரியனும் கெட்டபார்வையில் இரண்டு பன்னிரண்டில் நிற்பதைக் காணலாம்.

(தொடரும்)

## உரைவீச்சு

— விதி —

காலதேவனின்
அழித்தெழுதமுடியாத
நவீன ஓவியம்
(Modern Art)
அதை ஓரளவிற்கு
நுட்பமாகப் பார்த்து
ஆராய்ந்து அறிய
உதவும் உருப்பெருக்கி தான்
சோதிடம்

சி. சதாசிவம்

# திருமணம் தடைப்படுவதேன்?

வி. எஸ். வேலாயுதன் துறைநீலாவணை (கி. மா.)

திருமணம் என்பது பிறவிப் பேற்றைத் தரவல்லதாகும். இவ்வுண்மையை இரு வேறுபட்ட கருத்துக்களில் நோக்கலாம். ஒன்று இவ்வுலகில் பிறவி எடுத்ததின் பயனை அனுபவிக்கும் களந்தான் திருமணம் என்பதாகும். மற்றையது மக்கட்பரப்பின் பிறப்புக்குட் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ள சாதனமே திருமணம் என்பதாகும். இதனுற்ருன் போலும் பேரறிஞர் திரு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் ''திருமணப்பேறு பெருதார் பிறவிப் பேற்றை இழந்தவராவார்'' எனஅறுதியிட்டுக் கூறுகின்ருர். இங்ஙனம் இம்மைப் பேற்றைத் தரவல்லதான திருமணமானது சிலருக்கு உரிய காலத்திலும், பலருக்குக் காலம்கடந்தும் நிகழ்கின்றது. ஆனுல் மற்ருெரு வகையினருக்கோ திருமணவினையானது காலங்கடந்தேனும் நடவாது தடைப்பட்டுக் கொண்டேவருகிறது.

இங்ஙனம் திருமணம் தடைப்பட்டு வாழ்க்கையில் விரகத்தியுற்று நிற்கும் ஆண் பெண் இருபாலாரும் பொதுவாகக் கூறும் சமாதானங்கள் உண்மைக்கு முரண்பட்டனவாகவே அமைந்து விடுகின்றன, மனித வாழ்க்கையின் நடவடிக்கைகளை மட்டுமல்லாது உலகின் இயக்கத்திற்குத் தானும் கிரகங்களே காரணமாக அமைகின்றன என்பதை அவர்கள் முற்ருவே மறந்து விடுகின்றனர். ''பள்ளிப் படிப்போடு நின்றுவிடாது பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்ந்ததனுல் தான் என் திருமணம் இந்த அளவிற்குப் பிற்போடப் பட்டது'' என்பர் ஒரு சாரார். ''குடும்பத்தில் மூத்தபிள்ளையாகப் பிறந்த தோஷத்தால் தொழில்— உத்தியோகம் பார்த்து எல்லோர் குறைகளையும் ஏற்றுக் கொண்டதனுல் வந்த வினைதான்—தண்டனைதான் இந்தத் திருமணதாமதம்'' என்பர் பிறிதொரு சாரார். ''அந்தஸ்து, கௌரவம் ஆகியவற்றுக்கு அமைவான களத்திர வேட்டையில் இறங்கியதனுல் தான் என் திருமணம் இவ்வளவுக்கும் தள்ளி வைக்கப் பட்டது'' என்பர் வேறும் சிலர்.

உண்மையில் இக்காரணங்கள் ஏதோ ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக அமையப் பெறினும், அவைதாம் சரியான — திட்டவட்டமான நியாயங்கள் எனத்துணிய முடியாதிருக்கிறது. திருமணம் தடைப்படுவதற்கான உண்மைக்காரணத்தைச் சோதிடரீதியாகவன்றி வேறு எவ்வாற்ருனும் தர்க்கரீதியாக நிரூபிக்க முடியாது. என்பது மட்டும் மறுக்கொணு உண்மையாகும்.

ஒருவர் பிறந்தவேளை அடிவானத்தில் உதயமாகிய கிரக (இலக்கினுதிபன்) மும், அவ்வமயம் கிரக மண்டலத்தில் நிலைகொண்டிருந்த ஏனைய கிரகநாதர்களுமே அவரது எதிர்கால வாழ்வை நிர்ணயம் செய்கின்றனர் என்பதை நாம் நன்கு மனங்கொள்ள வேண்டும். இதனை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் ஒருவரின் ஜென்மகுண்டலி (இராசி) நவாம்சை முதலியவற்றில் அமைந்துள்ள கிரகங்கள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தித் திருமணத்தில் தடையையும், தாமதத்தையும் உண்டு பண்ணுகின்றன என்பதை நன்கறியலாம்.

இனி, திருமணம் தடைப்படுவதற்குக் காரணமாகவுள்ள பிரதான கிரக அமைப்புக்களை நோக்கி அப்பால் நமக்குக் கிடைக்கப் பெற்ற அனுபவ ஜாதகங்களைச் சோதிட - நவீன எண் சோதிட ரீதியாக ஆராய்வாம்.

ஒரு ஜாதகத்தின் பலம்—பெறுமானம் இலக்கினுதிபன் என்னும் அரசனின் இருப்பில்தான் தங்யுள்ளது. அவர் பகை நீசம் மறைவு ஆகியன உற்றிடாது கேந்திர கோணங்கள் ஒன்றில் வலுப்பெற்றிட வேண்டும். அத்தகைய அமைப்புப் பொருந்திய ஜாதகர் ஒருவருக்குச் சகல சம்பத்துக்களோடு கூடிய போக போக்கியங்களும், மங்கலமான வாழ்வும் கிட்டிடும். மாருக இலக்கினுதிபன் இராசி, அம்சம் ஆகிய இருநிலைகளிலும் வலுவிழந்து, பகை நீசம் மூடமுற்றுச்சட்டாட்டம வியங்கள் ஒன்றில் அமரப் பெற்றுள்ள ஜாதகர்

ஒருவரின் வாழ்வு பெரும் புயலுக்கு இலக்காகி விடுகின்றது. இத்தகைய ஒருவருக்குத் திருமணம் தடைப்பட்ட வண்ணமே இருக்கும். வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அமைதியும் குறைந்து காணும். திருமணமானாலோ குடும்ப வாழ்வு கலகலப்பற்று சோபை இழந்து காணப்படும். வறுமையும் துன்பமும் ஒருசேர வருத்தி நிற்கும். இராசியில் சுபத்துவம் பெறாத இலக்கினாதிபன் நவாம்சைமுதலிய ஏனைய வர்க்கங்களில் சுபத்துவம் பெற்றுவிட்டால் ஒருஜாதகர் முன்சொன்ன தீயபலன்களை எதிர்பார்க்க வேண்டி இராது. அனுபவத்தில் இலக்கினாதிபன் இராசியில் பலவீனமுற்றும் நவாம்சையில் உச்சம் ஆட்சி ஆகிய முழுப்பலத்தோடு கூடிய சுபத்துவங்களைப்பெற்றிட வாய்க்கப் பெற்ற ஜாதகர்களின் குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்து காணப்படுவதை நாம் நன்கு அறியலாம், இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் இராசிச் சக்கரத்தை மட்டும் கொண்டு ஒருவரின் பலாபலன்களை நிர்ணயம் செய்யாது நவாம்சச் சக்கரத்தையும் கவனத்திற்குக் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கேயாம்.

இலக்கினாதிபனுக்கு அடுத்த படியில் முதன்மைத்தானத்தில் வைத்தெண்ணப்படத் தக்கவர் சுக்கிரன் ஆவர். இவர் விவாகத்துக்கு காரகத்துவம் பெற்றவர். அதாவது காரணமாக இருப்பவர். அசுரகுரு எனப்பெயர் பெறும் இவர் ஒருவரது ஜாதகத்தில் நன்னிலையில் அமைந்திடப் பெறாவிடத்து அவர் வாழ்வானது பசுமையற்று வற்றி வரண்ட பாலைவனம் போன்றிருக்கும். திருமண வாழ்வும் மணமற்ற மலர்போலப் பயனற்றுப் போகும். வாழ்க்கையில்வறுமையும் துன்பமும் தொடர்ந்து வருத்திடும். சுக்கிரனோடு பாவர்கள் இணையும்போதுதான் சோதனை வேதனை மிகுந்ததாகக் காணும். சுக்கிரனோடு செவ்வாய் சேரும்போது விவாகக் குழப்பத்தையும், விவாகத்தின் பின்னர் குடும்பமே குருக்ஷேத்திரப் போர்க்களமாக மாறுவதையும் காணக்கூடியதாக இருக்கும். சுக்கிரனோடு சனி சம்பந்தமுறும்போது விவாகத் தடையையும், தாமதத்தையும் காணலாம். ஆனால் கோள் மண்டலத்தில் குடியிருக்க இடமற்ற சாயாக் கிரகங்களான இராகு-கேதுக்க்ள் இணையும்போதுதான் விபரீதமான விளைவுகளெல்லாம் ஏற்படுகின்றன. சுக்கிரனோடு இராகு சேர்க்கையுறும்போது ஆண் பெண் இருபாலாரின் ஒழுக்கத்திற்கும், கற்புக்கும் மாசு ஏற்படக் காரணமாகின்றது. சுக்கிரனோடு கேது சேரும்போது களங்கமுள்ள தாரம் வாய்த்திடப் பெறுவதையும் காணலாம்.

இலக்கினாதிபனின் இருப்பு விசேடங்களைப் போன்று களத்திரத் தானமாகிய 7-ம் இடத்தின் அதிபதியையும் அவர் பெற்றுள்ள ஸ்தான பலனையும், கிரக நோக்கையும் கருத்திற் கொள்ள வேண்டும். இதை விளக்கமாகச் சொன்னால் 7-ம் இடம் களத்திர இலக்கினமாகும். அந்தக் களத்திர இலக்கினமும் அதன் அதிபதியும் பெற்றுள்ள சுபாசுபத் தொடர்பு, உறவு, பலம் ஆகியவற்றை மிக நுட்பமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதாகும். களத்திரத்தானத்ததிபன் இலக்கினம், இலக்கினாதிபன், களத்திரத்தானம் என்பனவற்றிற்கு 6, 8, 12 ஆகிய மறைவுத் தானங்களில் பகை நீசம் பெற்றுப் பலவீனமடைந்து விட்டாரா? என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

7ஆம் இடத்தில் செவ்வாய் இருந்தால் அந்த இடம் களங்கமுறுவது ஒருபுறம் இருக்க, விவாகம் தடைப்பட்ட வண்ணமாகவும் இருக்கும். பெண்களுக்கு 7ல் செவ்வாய் பயங்கரமானதோர் அமைப்பாகக் கருதப்படுகின்றது. உண்மையில் இது துரதிஷ்டமானதோர் அமைப்பு என்று தான் கூறவேண்டியும் இருக்கிறது, அந்தோபரிதாபம்! சிலசந்தர்ப்பங்களில் இந்த 7ல் செவ்வாய் அமைந்திடப் பெற்ற பெண்களிடம் அச்சம் முதலிய பெண்மைக்குணங்கள் நான்கும் முற்றாக அற்றுப் போயும் விடுகின்றனதான். இவ்வகைப் பெண்களின் வாயாடித் தனமே இவர்களை இத்திறத்தினர் என இலகுவாக இனங்காட்டி வைத்துவிடும். குடும்பம், சமூகம் தொழில் ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் தங்களை 'முன்னோடி மூப்பர்'களாக கருதிச் செயற்படுவதற்கு முனையும்போது இந்த 7-ல் செவ்வாய்ப் பெண்கள் பலத்த எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் சமாளிக்கவேண்டி ஏற்படுகின்றது. இவ்வண்ணமே எட்டாம் இடமான மாங்கல்யத் தானத்திலும் செவ்வாயின் தொடர்பு தீயதென அஞ்சப்படுகின்றது. திருமணம் தடைப்படுவதோடு தாரக்கிலேசத்தையும் சில சமயங்களில் தார இழப்பையுமே ஏற்படுத்தி விடுகின்றது. இந்த மாங்கல்யத்தானம் தம்பதியரின் புனிதக்ஷேத்திரமாகும். இங்கு செவ்வாய் மட்டுமல்ல ஏனைய தீக்கோள்கள் தாமும் க்ஷேத்திராடனம் செய்யவே கூடாது. மேலும், செவ்வாய் ஏனைய 1, 2, 4, 5; 11, 12 ஆகிய இடங்களில் அமர்வதும் தீதாகும். இவற்றுள் 7, 8 ஆகிய இடங்களே மிக்க தீமை பயப்பனவாகும்.

(தொடரும்)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களுக்கு தடைப்பட்ட விவாகப் பேச்சுக்கள் கைகூடும். காதலில் வெற்றிகாணலாம். தொழில் தேடுபவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம். வீடு திருத்த வாங்க நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் லௌகீக வாழ்க்கையை விரும்புவோர்க்கு மகிழ்ச்சிகரமான மாதம்.

அதிஷ்ட நாட்கள்: டிச 16, 17, 31 பி. ப, ஜன 1, 2, மு. ப.

துரதிஷ்ட நாட்கள்; டிச 18, 19, 20 மு. ப. ஜன 4. பி. ப, 5, 6.




**பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி**

இவர்களுக்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 10-ம் வீட்டில் சஞ்சரிக்கிறார். மூர்த்திபலம் குறைந்தாலும் திக்குப்பலம் பெற்ற சூரியனாகையால் கஷ்டங்கள் அதிகம் தோன்றாது. 11 இல் உள்ள செவ்வாய் சிறு குழப்பங்களை உண்டுபண்ணினாலும் 9-ம் இடத்து வியாழன் தெய்வீக அருளால் எல்லாவற்றையும் சமாளிப்பார். மாதுரு வழித் தொல்லைகள் தோன்றி மறையும். தேகாரோக்கியம் பாதுகாத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்: தூரதேச நன்மைகள் உருவாகும். இனசன கொண்டாட்டங்களால் செலவுகள் அதிகரிக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் செவ்வாய் 11 இல் இருப்பது தாம்பத்திய உறவுகளுக்கு நல்லதல்ல. புத்திரகாரகன் வியாழன் திரிகோணராசியில் புத்திர சுகத்தையும், பண இலாபத்தையும் கொடுக்கும்.

வியாபாரிகட்கு புதன் 10-ல் இருப்பதால் பாதகமில்லை. வியாபாரம் சுமாராக நடக்கும். அலங்காரப் பொருட்கள் விற்பனை அதிகரிக்கும். வங்கி வசதிகள் கிடைப்பினும் திருப்திகரமாக அமையாது. மேல் முதலீடுகள் விரும்பத்தக்கதல்ல. பகைவர்களின் தொல்லைகள் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு திக்பலம் பெற்ற சூரியனால் நிலைமையைச் சமாளிக்க முடியும். தண்டனைகளிலிருந்து வியாழபகவான் காப்பாற்றுவார். சகாக்களின் தொல்லைகளைச் சமாளிப்பதிலேயே நேரம் செலவாகும். நன்மாற்றங்கள் தடைப்படுவதால் மனக்கவலையேற்படும்.

விவசாயிகட்கு சனி 8-ல் தொல்லைகளை உண்டுபண்ணுவார். பணக்கஷ்டமும் தொந்தரவு செய்யும். வெள்ளத்தாலும், நோய்களாலும் பயிரழிவுகள் ஏற்படும். வியாழனின் உதவியால் நிலைமையை ஒருவாறு சமாளிக்க வேண்டியிருக்கும்.

தொழிலாளர்கட்கு கஷ்டமான காலம்; தொழில் வாய்ப்புகள் நழுவிப்போகும். சகாக்களுடன் மனமுறிவு ஏற்பட்டுச் செய்தொழில் தடைப்படும். கூட்டுறவாளரும் பிரச்சினைகளை எதிர்நோக்குவர். பங்காளர் தெய்வத்தின் உதவியைப் பெற்று அமைதியை நிலைநாட்டுதல் அவசியம்.

மாணவர்கள் சுமாராகக் காலத்தைக் கழிக்கலாம். அட்டமத்துச் சனியால் கல்வியில் ஊக்கம் குன்றும். விளையாட்டுகளில் தோல்வியே ஏற்படும். 9 இல் யுரேனஸ் இருப்பதால் தூரதேசக் கல்வியில் திருப்பங்கள் ஏற்படும். வேலை தேடல் வெற்றியளிக்காது.

பெண்களுக்கு அட்டமத்துச் சனி அவமானத்தைத் தரும். நெருங்கிய சிநேகிதர்களுடன் பகைமை உண்டாகும். விவாகப்பேச்சுக்கள் கைகூடாது. போலிக் கௌரவத்தால் உந்தப்பட்டு பணச்செலவுகள் ஏற்படலாகும். வியாழன் 9-ம் இடத்திலிருப்பது முதியோர் உதவிகளுக்கும் தெய்வீக கடாட்சத்திற்கும் நன்றாகும். கணவனின் முன்னேற்றம் பாதிப்படையும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 18, 19, 20 மு. ப, ஜன 2 பி. ப, 3, 4 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்; டிச 20 பி. ப, 21, 22 ஜன 7, 8, 9 மு. ப.

## பூரண சந்திர கிரகணம்

**30-12-82** வியாழக்கிழமை மாலை பூரண சந்திர கிரகணம் நிகழும். கிரகணம் பற்றிய படியே சந்திரன் உதயமாவதால் இலங்கையில் மாலை சூரிய அஸ்தமனம் தொடக்கம் 6-37 வரை சந்திர பிம்பத்தில் ஒரு பகுதி மட்டும் மறைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

சூரிய அஸ்தமனம் 5-56

சந்திர உதயம் 6-06

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 160, செட்டித்தெரு, கொழும்பு-11.

## எண் 2 சந்திரன் (மேன்மை)

### சந்திரன்

ஆதவனின் சக்தியைத் தண்மையாக்கி எமக்கு நிலவொளியாகத் தருபவன் சந்திரன் ஆகும். சூரியனுல் வெளியிடப்படுகின்ற வெப்பசக்தியின் $1\frac{1}{2}$ இலட்சம் (கி.த.) மடங்கு குறைவான சக்தியான நிலவொளியை எமக்குத் தருகின்றது, சந்திரபகவானைப்பற்றி பலவிதமாக புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ளன. சந்திரன், திங்கள், மதி, இந்து, பிறைக்கலையினன், அம்புலி எனப் பல நாமங்களினுல் அழைக்கப்படுகின்ருன். உயிரைக் கொடுப்பவன் சூரியன் தந்தையாகவும், உயிரை வளர்ப்பவன் சந்திரன் - தாய் ஆகவும் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. மனித உணர்வுகளுக்கும், மனேதன்மைக்கும் காரணமானவன் என்றும் மாதுருகாரகன் என்றும் சோதிட சாஸ்திரம் எடுத்துக்காட்டுகின்றது.

பெண்களிலும் நீரிலும் நேரடியாகத் தனது தாக்கத்தைக் காட்டும் சந்திரன், கலை அம்சங் கொண்டவன். பூரணை அமாவாசையிலிருந்து தினம் 12 வீதம் 15 நாட்களுக்கு $(12 \times 15 = 180)$ தேய்பிறை அல்லது வளர்பிறையாக மாதம் இருமுறை சேர்ந்து விலகியபடி காலக்கணிப்பை அமைக்கிருன். உலகிலுள்ள உயிரினங்களின் வளர்ச்சியையும், உணர்ச்சியையும் பொருட்களின் வளர்ச்சியையும் கூட்டிக்-குறைக்க வல்லவன். சந்திரனின் அசைவினுல் பெண்களின் கெற்போட்ட இரகசியம் அதாவது (உணர்ச்சிகளின் பிறப்பிட அம்சங்கள் ஒவ்வொரு திதிகளிலும் மாறுபடுவதால்) உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களினுல் மாதவிலக்கு அல்லது கெற்பம் ஏற்படுகின்றது. இந்து சாஸ்திரங்களில் சிவனை— சூரியனுகவும், சிவன் சந்திரனை அணிந்தவனுகவும் தத்துவரூபமாகக் காட்டப்பட்டுள்ளது. இது சூரியனுக்கும் சந்திரனுக்குமுள்ள தொடர்பை எமக்கு உணர்த்துகின்றது; உயிரினங்களில் உணர்ச்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் இன்பப் பெருக்கத்தை ஏற்படுத்தவல்லது. இதனுல் பிறவிகள் உண்டாகி உலக இயக்கம் தவருது நடக்கின்றது. சோதிட சாஸ்திரத்தில் சூரியனும், சந்திரனும் முக்கியமான கிரகங்களாகும். குழந்தைகளுக்கு தந்தையும் தாயும் முதன்மையானவர்கள் அதுபோல் உலக மக்களுக்கு சூரியனும் சந்திரனும் அமைந்துள்ளனர். சூரிய சந்திரரை ஆராயுமிடத்து அடிப்படை இரகசியங்களும் எண்ணற்ற உண்மைகளும் வெளியாகும்.

### எண் 2 இன் ஆதிக்கர்கள்

எந்த மாதத்திலும் 2, 11, 20, 29-ம் திகதிகளில் பிறந்தவர்களும் ஜூன் 21 தொடக்கம் ஜூலை 20 (இரவு), ஏப்ரல் 20 தொடக்கம் மே 20 வரையும் கூட்டு ஒற்றை உடையவர்களும், பூரணை இரவில் பிறந்தவர்களும் சந்திரனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாவர். ஜனவரி, மார்ச், ஜூலை, செப்ரெம்பர், நவம்பர் அதிஷ்ட மாதங்களாகவும், டிசம்பர், பெப்ரவரி துன்பத்தைத் தரும் மாதங்களாகவும் உடல் நலம் பாதிக்கும் காலமாகவும் 2-ம் எண்காரர்களுக்கு இருக்கின்றது.

#### (அ) எண் 2 - சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்களது குண இயல்புகள்

இவ்வாதிக்கர்கள் இலட்சணமான வட்டமான அல்லது உருட்சியான அங்க அமைப்புகளைக் கொண்டவர்கள். அனேகமாக கலைகளில் நாட்டம் உள்ளவர்கள். நித்திரை செய்வதென்ருல் மந்திரப்பாயில் சந்திரமண்டலம் போவது போன்றிருக்கும். அரட்டையடிப்பதென்ருலும் மற்றவர்களின் விஷயங்களை குறை, நிறைகளைச் சொல்லித் திருப்தி காண்பதென்ருலும் குளிரூட்டிய (எயர்கண்டிசன்) வீட்டில் இருப்பது போன்ற திருப்தி இருக்கும். இவ்வாதிக்கர்கள் அடிக்கடி

கனவுலகில் காலத்தைக் கழிப்பர். இளமையில் ஏற்படும் சூழ்நிலைகளினுல் உண்டாகும் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்தும் கைக்கொள்வர். சிறுவயதிலேயே பெற்றோர்கள் இவர்களை தெய்வ பக்தியுள்ளவர்களாக வளர்த்துவரல் வேண்டும்; இல்லாவிடில் ஐந்தில் வளையாததை ஐம்பதில் வளைக்க முடியவில்லையே எனக் கலங்குவர், பழக்கதோஷத்தால் சிலர் கொலை, கொள்ளையர் களாக மாறிவிடுவர். சிறுவயதிலேயே இவர்கள் படித்தவர்கள். பண்புள்ளவர்கள் தெய்வபக்தி உள்ளவர்களுடன் பழகவிடல் வேண்டும். இத ஞல் அவர்களின் பழக்கவழக்கங்கள் இவர்களை உயர்ந்தவர்களாகவும், காருண்ணிய சீலர்களாக வும், பண்பு நிறைந்தவர்களாகவும் மாற்றிவிடும். சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பல நன்மை களைச் செய்வர். எனவே இவர்களை வளர்ப்பதில் பெற்றோர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

பொதுவாக பயந்த சுபாவத்தைக் கொண்ட வர்கள். இவர்களுக்கு எக்காரியத்திலும் விட்டுக் கொடுத்தால் மற்றவர்களை அதட்டி அதட்டித் தமது காரியங்களைச் சாதிப்பார்கள். கெஞ்சினுல் மிஞ்சுவர். மிஞ்சினுல் கெஞ்சுவர். புராண,இதி காச சாஸ்திரம், வைத்தியம், இலக்கியம் போன்ற பல விஷயங்களை ஓரளவு அறிந்து வைத் திருப்பார்கள். தமக்கு எல்லாம் தெரியும் என அடித்துச் சொல்லி எல்லோரையும் நம்பச் செய் வர். இவர்களின் அதட்டல், மிரட்டல்கள் 1, 8,9-ம் எண்காரர்களிடம் பலிக்காது. அவர்களின் பலவித அனுபவ அறிவு ஆற்றலுக்கு முன் இவர் களின் ஆதாரபூர்வமாக நிரூபிக்காத கதைகள் எடுபடாது. அனுவசியமாகப் பிறர் விசயங்களில் தலையிட்டு பலரைப் பகைத்துக் கொள்வர். இவ ரிடம் ஏதாவது காரியம் சாதிக்க வேண்டுமாயின் இவரை ஏற்றிப் போற்றிப் புகழவேண்டும். அப் படியானவர்களுக்கு இவர்களும் பல உதவிகளை யும் சலுகைகளையும் செய்துகொடுப்பார்கள். எண் 2 ஆதிக்கர்கள் ஏதாவது ஒரு கலையில் ஊன்றிச் சென்ருல் மின்னல் வேகத்தில் உயர்நிலையை அடைந்து எல்லோராலும் போற்றப்படுவார்கள். இவர்களுடைய பலவீனம் எதைச்செய்தாலும் முடிவெடுக்கத் தயக்கம் காட்டுவதாகும். சரி வருமா, பிழை வருமா, நயமா, நட்டமா என அடிக்கடி தாமரை இலைத் தண்ணீர் போன்று தத்தளித்தபடி இருப்பார்கள். இதனுல் சிலவேளை களில் அறிவாற்றல் அற்றவர்களினது ஆலோ சனைகளைக் கேட்டு ஏமாற்றம் அடைவர். வரு கின்ற சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டு நமக் கென்று சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்ப்பர்.

எண் 2, கலகத்தைப் பிறப்பித்து நியாயத் தைத் தேடமுற்படும். சட்டவாதிகளின் எண் ணுகும். பெண் தன்மை மிகுந்த இவர்கள் தமது மனைவி மக்கள் யாருடனும் அதிகம் கதைக்க விரும்பமாட்டார்கள். பிறருக்கு ஆலோசனைகளை கூறுமளவிற்கு தாங்கள் கடைப்பிடிக்கமாட்டார் கள். அவசர புத்தியால் பலரிடம் பகைத்துக் கொள்வர். கற்பனை ஆராய்ச்சி மனச்சாட்சி என் பவற்ருல் அடிக்கடி உந்தப்படுவர். சிறு பிரச்சினை களைப் பெரிதாக்கி ஒருவருடன் ஒருவரைப் பகைக் கவோ, சினேகிக்கவோ செய்யும் இவர்கள் தம் மைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்று அறிய ஆவலாக இருப்பார்கள். ஆதிக்க யோசனை, அமைதியற்ற நிலை என்பன இவர்களில் சிலரை மனேவியாதிக்காரர்களாக்கிவிடும். சிலர் நம் மத்தியில் மனேவியாதியுடன் மறைந்து வாழுகிருர்கள். அதிக எண் சக்தி உள்ளவர்கள் தெய்வ நம்பிக்கை, நற்சிந்தனைகளால் உயர்நிலை அடைவர். சூரியன் (1)ன் கீழ் சொல்லப்பட்ட பலன்கள் கலந்து நடக்கும். மகான்களாகவும், வணங்கக் கூடியவர்களாகவும், தியாகிகளாகவும் விளங்குவார்கள். சந்திரனின் பலன் குறைந்த வர்கள் வழக்கு, வம்புகளில் ஈடுபடுவர். விசாரணை தண்டனை அடைபவர்களாக இருப்பார்கள். அதனுல் வழக்கு விஷயங்களில் அதிக அனுபவத்தை உடையவர்களாக இருக்கின்ருர்கள்.

இவ்வெண்ணுதிக்கர் சலன புத்தியுடையவராத லால் நேர்மையற்ற தொழில்கள் ஒத்துவர மாட்டா. இவர்களில் ஆராய்வு, நயம்பட உரைத் தல், கலை உணர்வுகளுகேற்ற தொழில்கள் அமை யலாம்.

## தொழில்

வக்கீல், ஆசிரியர், கலைஞர், எழுத்தாளர், பெண்கள் விரும்பும் பொருட்களை உற்பத்தி அல் லது வியாபாரம் செய்வோர், ஸ்ருடியோ, சினிமா ரேடியோ, ஆராய்ச்சித்துறை, அரசாங்கவிகிதர், கணக்குத்தொடர்புடைய தொழில் செய்வோர், புடவை, நகை, வட்டிக்கடை, உணவு விடுதிகள் நீருடன் தொடர்புடைய பண்ணை. எண்ணை தர குத் தொழில், இரசாயன (டை) வியாபாரம் ஆலய நிர்வாகம், போன்ற தொழில் செய்வோர் இவ்வெண்ணில் உளர். இவர்கள் தனித்து தொழில் செய்வதால் சிறப்படைவது கஷ்டம். கூட்டுத்தொழிலே அதிகலாபத்தைக் கொடுக்கும். இருவழிகளில் இவர்களுக்கு வருமானம் கிடைக் கும். 35 வயதிற்குப் பின்பு சிறப்பு நிலை ஏற்படும்.

(தொடரும்)

# இராகு கேது நிழற் கிரகங்களே!

ச. நிர்மலா — பருத்தித்துறை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| V 15 29 | VI 16 04 | VII 13 54 | VIII 12 20<br>இராகு<br>15 57 |
| IV 13 09 | 17-9-1982<br>கொழும்பு | | XI 11 44 |
| III 11 44 | காலை: 11-00 மணி | | X 13 09<br>சுக் 18 03<br>சந் 26 52 |
| கே 15 57<br>II 12 20<br>நெ(வ)0 44 | அ.தி. 0 15<br>செவ் 4 35<br>யுரே 7 43<br>லக் 13 54 | XII 16 04<br>குரு 15 26 | XI 15 29<br>சூரி 10 30<br>புத 23 45<br>சனி 27 55 |

நின்றசை:- சூரியதசையில் 5 வரு 10மா 28 நா.

| கிரகம் | நட்சத்திராதிபதி | உப நட்சத்திராதிபதி |
|---|---|---|
| சூரியன் | சந்திரன் | சந்திரன் |
| சந்திரன் | சூரியன் | சூரியன் |
| செவ்வாய் | சனி | சனி |
| புதன் | செவ்வாய் | செவ்வாய் |
| குரு | இராகு | சுக்கிரன் |
| சுக்கிரன் | சுக்கிரன் | செவ்வாய் |
| சனி | செவ்வாய் | சனி |
| இராகு | இராகு | சுக்கிரன் |
| கேது | சூரியன் | சுக்கிரன் |

7-ம் வீட்டுமுனை: சுக்கிர ராசி சந்திரசாரம் குரு உபநட்சத்திரத்தில் அமைகின்றது.

9-ம் வீட்டுமுனை: சந்திர ராசி சனி சாரம் சந்திர உபநட்சத்திரத்தில் நிற்கிறது.

அதிஷ்டநிலை செவ்வாய் இராசி குரு சாரம் சந்திர உபநட்சத்திரத்தில் நிற்கிறது.

இச்சாதகத்தின்படி குருவும் இராகுவும் ஒரே விதமான பலன்களைக் கொடுப்பார்கள்.

அதிஷ்ட நிலை வைத்து அதன் காலங்களை இரு விதமாக ஆராயலாம்.

முதல் முறை:- அதிஷ்டநிலை நின்ற இராசியதிபதி, நட்சத்திராபதி, உபநட்சத்திராதிபதி முதலியோரின் தொடர் காலத்தில் அதிஷ்டகரமான சம்பவங்களை எதிர்பார்த்தல். அதாவது செவ்வாய், குரு (குருவும் இராகுவும் ஒரேவிதமான பலன்களை அளிப்பதால் இராகுவையும் எடுத்துக் கொள்ளலாம்.) சந்திரன் முதலியோரின் தொடர் காலத்தில் எதிர்பார்க்கலாம்.

இரண்டாவது முறை:- அதிஷ்டநிலை நின்ற உப நட்சத்திராதிபதி, சந்திரன் சூரிய நட்சத்திரத்தில் நிற்கிறான். சூரியனோ புதன் இராசியில் நிற்கிறான், இதனால் சந்திரன், சூரியன், புதன் முதலியோரின் காலத்தில் அதிஷ்டத்தை எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதி தேர்தலுக்கு நின்ற வேட்பாளர்களில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் உதயலக்கினம் புதன் இராசி, சந்திர நட்சத்திரம் சூரிய உபநட்சத்திரத்தில் அமைகிறது. அதாவது இரண்டாவது முறையில் கூறப்பட்ட கிரகங்களே இவருடைய உதயலக்கினத்தை ஆள்வதால் இவ் அதிஷ்ட நிலை அவர்களுக்கு சாதகமாய் அமைகிறது.

அடுத்து, இச்சாதகத்தில் புதன் சனியுடன் மிகத்தழுவிய நிலையில் நிற்பதால் சனியையும் எடுத்துக் கொள்ளலாம்.

சந்திரன். சூரியசாரம் சூரிய உபநட்சத்திரத்தில் நிற்பதாலும் சூரியன் சந்திரனைவிட வலிமையடைகிறான். எனவே இரண்டாவது முறையின்படி சூரியன், புதன், சனி, சந்திரன் முதலியோரின் தொடர்காலத்தில் அதிஷ்டத்தை எதிர்பார்க்கலாம்.

இச்சாதகத்தின்படி சூரியன், புதன், சனி முதலியோர்கள் கன்னியில் நிற்பதுடன் கௌரவ ஜெ. ஆர். ஜெயவர்த்தனாவின் உதயலக்கினத்தையும் சுபபார்வை பார்க்கிறார்கள்.

இதனால் ஜனாதிபதி தேர்தல் சூரியதசை சூரியபுத்தி, சனி அந்தரம் (7-10-82 தொடக்கம் 24-10-1982 வரையும்) அல்லது சூரியதசை சூரிய புத்தி புதன் அந்தரம் (24-10-1982 தொடக்கம் 9-11-1982 வரையும்) நடைபெற்றால் கௌரவ ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு அதிஷ்டமாய் அமை

யும். அதிலும் சனி அந்தரம் மிக அதிஷ்டமாயி ருக்கும்.

இனி முதலாவது முறையின்படி ஆராய்வோம். இதன்படி செவ்வாய், குரு (இராகு), சந்திரன் முதலியோர் அதிஷ்ட நிலையை ஆளுகிறார்கள்.

கௌரவ ஜே. ஆர். ஜயவர்த்தனவின் சாதகத்தில் சந்திரனும் செவ்வாயும் சிங்கராசியில் கட்டித் தழுவிய நிலையில் நிற்பதால் சந்திரனுக்குப் பதிலாக செவ்வாயைக் கொள்ளலாம். இதனால் இவ் அதிஷ்டநிலையை செவ்வாய், குரு (இராகு), செவ்வாய் முதலியோர் ஆதிக்கம் செலுத்துவதாகவும் நியமனநாளில் புதன் செவ்வாய் சாரம் செவ்வாய் உபநட்சத்திரத்தில் நிற்பதால் அதிஷ்ட நிலையை குரு (இராகு), புதன் முதலியோர் ஆளுவதாகக் கருதலாம். இக்கிரகங்களே, தேர்தல் காலத்தில், ஜனதிபதி ஜே, ஆர். ஜயவர்த்தனவின் (குருதசை | இராகு புத்தி | புதன் அந்தரம்) தசாபுத்தி அந்தரகாலமாய் அமைந்து விட்டது. இதனால்தான் ஜனதிபதிக்கு 20-10-1982-ல் நடைபெற்ற தேர்தலில் அதிஷ்டதேவதையின் அருள் கிட்டியது.

இராகு கேது முதலியோரின் நிலையைக் கணித்து பலன் கூறலாமா? அப்படியானல் வெறும் வெட்டுப்புள்ளிகளுக்கு தசாபுத்தி காலங்கள் எதற்கு? இவ்வுணர்ச்சி இடங்களுக்கு வெறும் வெட்டுப் புள்ளிகளுக்கு (இராகு கேது) சொந்த வீடோ உச்ச நீசமோ கிடையாது. அப்படியானல் எமது முன்னேர் அருளிய அரும் பொக்கிஷமான நாட்டுச் சோதிடத்தில் உச்சம், நீசம் என்றெல்லாம் இராகு கேதுவுக்கு கூறுவதன் அர்த்தம்தான் என்ன? நாட்டுச் சோதிடத்தின் அத்திவாரமே ஆட்டம் காணுகின்றதல்லவா?

இதனால்தானே சோதிடமேதை கிருஷ்ண மூர்த்தியவர்கள் தனது முறையில் சொந்தம், நீசம், உச்சம் என்பவைகளை கையாளுவதில்லை.

நம் முன்னேர்கள் இராகு கேதுக்களைப்பற்றி என்ன கருத்துக் கொண்டார்கள்?

அவைகள் மற்றும் கிரகங்களைப்போல் நிறை, உருவம், மூலம் இல்லாதபடியாலும் இராசி மண்டலத்தில் ஒரு புள்ளிகளாகக் கணித்தபடியாலும் ஒரு தீர்க்கமான வேகமும் பாதையும் இருப்பதாலும், பூமியிலுள்ள உயிரினங்களில் தாக்கம் செலுத்தியபடியாலும் அவைகளை நம்முன்னேர்கள் சாயாக்கிரகங்கள் (Chayagrahas) அல்லது நிழற்கிரகங்கள் (நிழல் வடிவமான கிரகங்கள் அல்ல—Shadowy Planets) எனக் கருதினர்கள்.

1930-ம் ஆண்டுதான் முதன் முதலாக புளூட்டோ கிரகத்தைக் கண்டுபிடித்தார்கள். அதனால் 1930-ம் ஆண்டுக்கு முன்னர் புளூட்டோ கிரகம் இருக்கவில்லை என்று கொள்ளலாமா? ஒரு விடயத்தை அறியமுடியவில்லையென்றால் அவ் விடயமே இல்லையெனத் தீர்மானிக்கலாமா?

முனிபுங்கவர்கள் கூறவில்லையென்றால் அது முற்றிலும் இல்லையென்பதா அர்த்தம்? பதினெண் ஞானிகளுக்குள் கருத்துவேற்றுமை ஏற்பட்டதால்தான் பதினெட்டு சித்தாந்தங்கள் தோன்றின. அவைகளில் ஒன்று மட்டுமே சரியானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாயிருக்கலாம்; அல்லது எல்லாமே தவறானதுமாயிருக்கலாம். இதை எப்படி அறிவது? இதேபோல் வராஹ மிகிரர் கூறியிருப்பதெல்லாம் மிகவும் சரியென ஏற்றுக்கொள்ளலாமா? அவைகளில் சில சரியாயும் வேறு சில தவறும் இருக்கலாமல்லவா?

மிகிரர் இராகு கேதுக்களைப்பற்றி எதுவும் கூறவில்லையென்றால் அவர் காலத்தில் இராகுகேது இல்லையென்பதா விளக்கம்? "ஆக மற்ற 7 கிரகங்களை மட்டும் கைக்கொண்டு சரியான முறையில் பலன் சொல்லியிருக்கிறார்" என்பதன் அர்த்தம் என்ன? அவர் பலன் கூறுவதற்கு கையாண்ட முறைகளும், தசாபுத்திகளும் எப்படியானது? திருஷ்டியில் தோன்றியதெல்லாம் 7 கிரகங்களை மட்டும் கைக்கொண்டா சொல்லப்பட்டது? 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த "கையிரோ" (Cheiro)வும் திருஷ்டியின் உதவியால் பல திறமான சோதிடப் பலன்கள் கூறியுள்ளார். அவைகளுக்கும் 7 கிரகங்களை வைத்து காரணமும் விளக்கமும் கூறமுடியுமா?

வராகமிகிரர் எழுதிய "பிருகத்சம்கித" வில் 5-ம் அத்தியாயத்தில் இராகுவைப்பற்றிய தகவல்கள் இடம்பெறுகின்றன. அவைகளை ஒருபொருட்டாக மதிக்கக்கூடிய நிலையில் மிகிரர் விளக்கம் தரவில்லை.

சமயத்திற்கும் எண் சோதிடத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது "நிழல் நிஜமாகிறது" என்பதில் புலனகிறது.

நம்முன்னேர்கள் கிரகங்களுக்கு எண்கள் அளித்ததுபோல் இராகு கேதுவுக்கும் எண்கள் அளித்ததுடன்; சூரியனை வலம்வரும் பாதையும் சந்திரனின் பாதையும் இராகு கேது முதலியோரை நிர்மாணிப்பதால் சூரியனுக்கும் சந்திரனுக்கும் அளித்த எண்கள் இராகு கேது முதலியோருக்கு அளிக்கும் எண்களுடன் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை "நிழல் நிஜமாகிறது" வற்புறுத்துகிறது.

# வளரும் விண்ணியல் 7

பிரமகுப்தர்

வராஹமிஹிரருக்கு அடுத்த வானநூல் வல்லுனர் பிரமகுப்தராவர். இவர் கி. பி. 198-ல் பிறந்தவர். இவர் பிரமஸ்புட சித்தாந்தத்தையும் (BrahamasPuda Siddantha) கண்டகாத்தியாயத்தையும் (KandaKathiyaya) இயற்றினர். கண்டகாத்தியாயத்தில் கிரகங்களின் கிழக்கு, மேற்குத் தூரம் கணிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. பிரமஸ்புட சித்தாந்தத்தில் ஆரியப்பட்டருடைய சில முறைகள் திருத்தியும் விளக்கியும் கூறப்பட்டுள்ளன. இந்நூல்களிற் கூறப்படும் சில அரிய முறைகளாவன:-

1. மந்த (Manda) சீக்கிர (Sigra) கதி வேறுபாடுகளால் தாக்கப்படுகின்ற கிரகங்களின் கதியைத் தினப்படி காணும் முறை.
2. சுத்தமான லம்பன சமீகரணத்தை ஸ்புட விக்ஷேபங்களில் கூறும்முறை.
3. சூரியனது உன்னதாம்சத்தை எத்தினத்திலும் தென்கீழ் தென்மேல் லம்பங்களிற் காணும் முறை.
4. வலன (Valana) வைப்பற்றி மிகச்சுத்தமான விளக்கம்.
5. திருக்கர்மா (Drikkarma) வுக்குரிய மிகச் சுத்தமான சமீகரண முறை.
6. துவீதியாந்தர சம்ஸ்கார (Second Difference) மாகிய சுத்தமான சம்ஸ்கார முறையைக்கண்டு உபயோகித்தல் ஆகியனவாம்.

மேலும் பிரம்குப்தர் தாம் மேற்கூறப்பட்ட இரு நூல்களையும் இயற்றிய காரணத்தை இரு சுலோகங்களில் கூறியிருக்கிறார், எவ்வாறெனில்,

1. ஆரியபட்டர் விஷ்ணு சந்திரராகியோரியற்றிய நூல்களிற் சொல்லப்பட்ட செவ்வாய் ஆதியாகவுள்ள கிரகங்களின் உண்மையான நிலை தவறிவிட்டமையால் (அதாவது பிரத்தியட்சத்துக்குச் சரிவராததால்) கற்றோர் அந்நூல்களைக் கைக்கொள்ளாராயினர்.
2. கிரகங்களினுடைய உண்மையான நிலைகளையறிவதற்கு ஆரியபட்டர் கூறிய முறையானது "தற்போது பிரத்தியட்சத்துக்குச் சரிவராமையால் பின்வரும் முறையைக் கூறுகின்றேன்" எனக்கூறியுள்ளார்.

பாஸ்கராசாரியர்

கி. பி. 1150ல் பிறந்த இவர் கணிதசாஸ்திரத்தில் மிகப்பாண்டித்தியமுடையவராய் விளங்கினர். இவர் சித்தாந்த சிரோன்மணி (Siddantha Siromani) என்னும் நூலை இயற்றினர். இவ்வரிய நூல் பதினெண் சித்தாந்தங்களையும், ஆரிய படீயம், பிரம ஸ்புட சித்தாந்தம் முதலியவைகளையும் நன்கு ஆராய்ந்து அக்காலத்துக்குத் தக்கவாறு இயற்றப்பட்டதாகும்.

பூமிக்குக் கவரும் சக்தி உண்டென்பதை நியூட்டன் காணுதற்கு முன்னதாகவே பாஸ்கராசாரியர் சித்தாந்த சிரோன்மணியிலுள்ள கோளத்தியாயத்தின் புவனகோசனையில் நன்கு கூறியிருக்கின்றார். இதுவன்றி மேல்நாட்டிலுள்ள கணித வல்லுனர்கள் கண்டறிந்த கணித நுட்பங்களையும் இவர் தமது சித்தாந்த சிரோமணியில் 500 வருடங்கட்கு முன்னதாகவே கூறியிருக்கின்றார்.

சித்தாந்த சிரோமணி நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுளது. அவை முறையே கோளாத்தியாயம் (Goladiyayam) கணிதாத்தியாயம் (Ganithadiyayam), பீஜ கணிதாத்தியாயம் (Bija Ganithadiyayam), பாடீ கணிதாத்தியாயம் (Padi-Ganithadiyayam) என்பவைகளாகும். இவற்றுள் பாடீ கணிதாத்தியாயம் "லீலாவதி" (Lilavathi) என்று அழைக்கப்படும்.

சித்தாந்த சிரோமணியின் முதலாம் பகுதியாகிய கோளாத்தியாயம் பதின்மூன்று பிரிவுகளையுடையது. அவை முறையே 1. கோளப் பிரச்னை 2. கோளரூபப் பிரச்னை, 3. புவன கோசம், 4. மத்திய கதிவாசனை, 5. ஸ்புட கதிவாஸனை, 6. கோளபந்தம், 7. திருப்பிரச்னவாஸனை, 8. கிரகவாஸனை

9. திருக்கர்ம வாஸனை, 10. செருங்கோன்னதி வாஸனை, 11. யந்திர வாஸனை, 12. ருதுவர்ணனை 13. பிரச்னுத்தியாயம் என்பவைகளாகும். இவை தவிர ஜ்யாவின் உற்பத்தி (Formation of Sines) என்னும் ஓர் அத்தியாயமும் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிரோமணியின் மூன்ருவது அத்தியாயத்தில் ஆகர்ஷண சக்தியைப் பற்றிக் கூறுமிடத்து 'இவருஞ்சக்தி பூமிக்கு இயல்பானது' அச்சக்தியினுல் வேறென்றினுலும் கவரமுடியாத பொருட்களை அது இழுக்கிறது. பொருள்கள் விழுவது என்று சொல்வது பிழையாகும். அவை பூமியினுல் இழுக்கப்படுகின்றன. மேலும் ஓர் பழுவுடையதும் பழுவில்லாததுமான இரு வஸ்துக்கள் ஒரே சமயத்தில் மேலேயிருந்து விழுமாயின் பழுவுடைய வஸ்து முதலிலும் மற்றையது பின்னதாகவும் பூமியில் வந்து வந்து வீழ்கின்றன. ஆனுல் வாயு இல்லாதவிடத்தில் விடப்படுமாயின் இவை இரண்டும் ஒரேசமயத்தில் வீழ்வனவாகும் எனக் கூறியிருக்கிருர். இத்தகைய அரியவிதிகளை நியூட்டன் அறிவதற்கு முன்னதாகவே பாஸ்கராசாரியர் அறிந்ததனுற்ருன் அவ்ருடைய பெருமை தற்காலத்தும் பாராட்டப்படுகிறது.

முற்கூறப்பட்ட அரிய விஷயங்களைத் தவிர சூரிய சந்திர கிரகணங்களைப் பற்றியும் (Eclipses) அனேக விஷயங்கள் கூறியிருக்கின்ருர். இவை யாவையும் நோக்குமிடத்து பாஸ்கராசாரியாரின் வானநூல் அறிவும், கணித வன்மையும் எவ்வளவு விசேடமுடையது என்பது தெளிவாகும்.

இந்திய வான சாஸ்திரிகள் எல்லாக்கிரகங்களும் ஒருங்கு சேருங்காலத்தை யூகித்துப் பின்னுடிக்கணக்கிட்டு சில காலவகுப்புக்களைக் கணக்கிட்டனர். ஒரு கல்பம் 4, 320, 000, 000 வருடங்கள் கொண்டதென்றும், மஹாயுகம் இதில் ஆயிரத்திலொருபங்கு (4, 320000) வருடங்கள் கொண்டதென்றும் கணக்கிடப்பட்டது. எவ்வாறெனில் கலியுகம் மஹாயுகத்தில் பத்திலொரு [4, 32000] வருடங்கள் கொண்டதாகவும், துவாபரயுகம் கலியுகத்தில் இருமடங்கு (8, 64, 000) வருடங்கள் கொண்டதாகவும், திரேதாயுகம் கலியுகத்தில் மும்மடங்கு (1296000) வருடங்கள் கொண்டதாகவும், கிருதயுகம் கலியுகத்தில் நான்கு மடங்கு (1728000) வருடங்கள் கொண்டதாகவும் கணக்கிடப்பட்டன.

(தொடரும்)

# பிறந்த திகதிப்படி

## உங்கள் திறமை சாமர்த்தியம்

வே. சின்னத்துரை, நல்லூர்

நீங்கள் எந்த வருடத்திலாயினுஞ்சரி, எந்த மாதத்திலாயினுஞ் சரி ஏதோ ஒரு திகதியில் பிறந்திருப்பீர்கள். பிறக்கும் ஒவ்வொரு திகதிக்கும் ஒரு பலனுண்டு. பரவலாக அவற்றை இங்கே கூறுவாம்.

## திகதி 30-ல் பிறந்தவர்கட்கு

பொருளியல், அரசியல் இரண்டும் சேர்ந்த ஞானம் உமக்குண்டு. எதையும் தெரிந்துகொள்ளும் ஆசையும் ஆர்வம் மிகவும் ஆழமாக ஆராயும் தன்மையை உண்டாக்கி மானிடவர்க்கத்தின் காரணங்கள் என்ன? எவை? எங்கே எடுத்துச் செல்லும்? என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடுத்தும். அறிவை அனுபவத்தில் போட முயற்சிப்பீர். உண்மையான அறிவைப் பெற விருப்பு இருந்தும் நீர் தீர்க்கமில்லா முடிபுக்கு அடிக்கடி குதிப்பீர். இந்த விதமான ஆர்வம் உம்முடைய முடிபான நோக்கத்தை தோற்கடித்துவிடும். அவற்றில் மூழ்குமுன் கொஞ்சம் தாமதித்து எல்லா பாரிய விடயங்களிலும் கொஞ்சம் தடக்குமுண்டி போடுங்கள்.

பணத்தைப் பற்றியுள்ள உமது சுபாவங்களைப்பற்றி உமக்குப் பூரணமான நம்பிக்கை இருப்பினும் பொருளியலில் சூதாட உமக்கு ஒரு சாய்வு உண்டு. கூடுதலாக இது உம்க்குச் சாதகமாக வரும். எப்படி எனினும் கஷ்டத்தையும், சுகத்தையும், வெற்றியையும் தோல்வியையும் சம்மாக எண்ணும் மனம் படைத்திருக்கிறது. நீர் தாராள மனமுடையீர். ஆனுலும் வேண்டுமென்று முடத்தனமாக இக்கொடைகளில் இறங்கமாட்டீர். காதல் விடயத்தில் சுயநலமற்றவராவீர்; ஆனுல் உமக்கு ஏற்ற சோடியைத் தேடிக்கொள்ளவும்.

# கடிகாரமின்றி நேரமறிதல்

இம்முறையால் ஓரளவு நேரம் இன்னவாக இருக்கமுடியும் என ஊகிக்கலாம். ஆயினும் ஐந்தோ பத்து நிமிடங்கள் வித்தியாசமேற் படினும் அண்ணளவாக நேரத்தை அறிந்து கொள்ளலாம்.

சூரியஒளியில் நமது நிழலை வெறுங்கால் பாதத்தாற் பிழையின்றி அளத்தல் வேண்டும். எத்தனை பாதங்களென எண்ணி, அவ்வெண்ணை இரண்டால் பெருக்கி பதினொன்றைக் கூட்ட வேண்டும். இந்த எண்ணால் 87ஐப் பிரிக்க வேண்டும். பிரித்துவரும் விடையுடன் காலையில் அதாவது காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் ஆறைக்கூட்டி நேரத்தைக் கணக்கிடலாம். பகல் 12 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் பிரித்துவரும் விடையை ஆறில் இருந்து கழித்து நேரத்தையறியலாம்.

எமது நிழலை அளக்கும்போது நிமிர்ந்து நின்று ஒரு அடையாளத்தைக் குறித்து வைத்துக்கொண்டு அடுத்த பாதத்தை வைக்கும் போது இரண்டு என்று எண்ண ஆரம்பித்து கவனமாக அளத்தல் வேண்டும். அப்படியளந்த எண்ணிக்கை 8 பாதங்களும் 9-ம் பாதத்தின் 3/10 பங்குமென்றால் பாத எண்ணிக்கை 8 3/10 ஆகும். அதாவது 8.3 ஆகும்.

$$8.3 \times 2 = 16.6 + 11.0 = 27.6$$

87 ÷ 27.6

276 ) 870 ( 3 மணி
828
42
60
276 ) 2520 ( 9 நிமி
2484
36
60
276 ) 2160 ( 8 செக்
2208

விடை: 3 மணி 9 நிமி 8 செக்

காலை நேரமாயின் 6 + 3 மணி 9 நிமி 8 செக்
= 9மணி 9 நிமி 8 செக்

மாலை நேரமாயின் 6 — 3 மணி 9 நிமி 8 செக்
= 2 மணி 50 நிமி 52 செக்

சில மாதங்களில் உச்சிக்குமேல் போகும்போது பிரிக்கப்படும் எண் 87ஆகவும் சூரியன் பக்கவாட்டில் போகும்போது பிரிக்கப்படும் எண் 85ஆகவோ 83 ஆகவோ இருப்பதையும் கவனிக்கலாம். இப்படி நேரத்தைக் கணக்கிடலாம்.

ஆக்கம்: எஸ். ஆர். பேரின்பநாயகம்

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் கார்த்திகை மாதக் கூட்டம் 28-11-82 ல் நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 4-30 மணிக்கு பண்டிதர் கே. என். நவரத்தினமவர்களின் தலைமையில் ஆரம்பித்தது. சென்ற கூட்ட அறிக்கையும் நிதி அறிக்கையும் முறையே காரியதரிசியாலும் பொருளாளராலும் வாசிக்கப்பட்டன. இந்த வருடச் சந்தா கட்டாதவர்களிடமிருந்து சந்தாவை வசூல் செய்யுமாறு சபை பொருளாளரைப் பணித்தது.

திரு. ந. கிந்தசாமி ஐயர் வானியல் அரிச்சுவடியில் புதனும், வெள்ளியும் சூரியனிலிருந்து இத்தனை பாகையில் ஆகக்கூடியதாகச் செல்லும்? ஏன் அப்படிச் செல்லும்? எப்போது அவை அஸ்தமிக்கும் எப்போ அவை வக்கிரமெய்தும் என்பதை வானியல் ரீதியாக படத்தில் கீறி விளக்கினர். அத்துடன் ராகு, கேது, கிரகங்களா? என்பது பற்றி உள்ள பிரச்சனைக்கு தீர்வு போல் படத்தில் அவை பற்றி விளக்கி விஞ்ஞான ரீதியாக அவை புள்ளிகளே என்றும் சாயை என்பதற்கு அப்புள்ளியில் எப்போது சந்திரனின் நிழலோ பூமியின் நிழலோ விழும் என்பதை விளக்கினர்.

பின்பு பிரதம பேச்சாளரான கே. என். நவரத்தினமவர்கள் சோதிடத்தில் ஆத்மீகம் என்னும் பொருள் பற்றிப் பேசினர். ஒவ்வொரு கிரகமும், ஒவ்வொரு ராசியும் எப்படி ஒருவரில் ஆத்மீகத்தை உண்டாக்குகிறது என்பது பற்றி விளக்கமாக கூறினர். அடுத்த முறைக்கு இவர் கூறிய இலக்கணங்களை வைத்து இலக்கிய சாதகங்களை காட்டுவார்.

பின்பு கலந்துரையாடலில் பிரிக்த் ஜாதகத்தில் ஆத்மீகம், துறவுக்கு உள்ள கிரகநிலைகளைக் கூறி அடுத்த கூட்டத்துக்கு அங்கத்தவர்களை இந்த இலக்கணம் அமைந்த சாதகங்களை கொண்டு வந்து கலந்துரையாடலில் கூறும் வண்ணம் காரியதரிசி கேட்டுக் கொண்டார். இரவு 6—30 மணியளவில் கூட்டம் நிறைவேறியது.

அடுத்த கூட்டம் 26-12-82-ல் மாலை 4மணிக்கு ஆரம்பமாகும்.

# சோதிடம் கற்போம்

''ஞானி

4

## இரகங்களின் சஞ்சாரம்

சூரியன் காலையில் உதித்து மாலையில் அஸ்தமித்து மீண்டும் மறுநாட் காலையில் உதயமாகின்றது. இவ்வாறே தினந்தோறும் சூரியசஞ்சாரம் நிகழ்கின்றது. ஒருநாள் சூரியனோடு கூட உதிக்கும் ஒரு நட்சத்திரம் மறுநாள் சூரியன் உதிக்க ஏறக்குறைய 4 நிமிஷம் முன்னதாக உதயமாகும். ஏன் இவ்வாறு ஏற்படுகின்றது என்பது ஆராய வேண்டியதே.

பூமி தன் அச்சில் சுழல்வதோடு மாத்திரம் அமையின், சூரியனும் அதனோடு கூட உதித்த நட்சத்திரமும் என்றும் ஒருமித்து உதயமாகும். இச்சுழற்சி மாத்திரமன்றித் தினந்தோறும் பூமிக்கு ஒவ்வொரு பாகை இடப்பெயர்ச்சியுமுண்டு. இவ் இடப்பெயர்ச்சியினாலும், சூரியன் நட்சத்திரங்களிலும் பார்க்கப் பூமிக்கு அண்மையில் இருப்பதாலும் இவ்வாறு உதயபேதம் ஏற்படுகின்றது.

பூமியானது சூரியனைச் சுற்றியோடுவது போலவே மற்றைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. புதன் ஏறக்குறைய 88 நாட்களிலும் சுக்கிரன் 226 நாளிலும், பூமி 365¼ நாளிலும், செவ்வாய் 1 வருடம் 320 நாளிலும், வியாழன் 11 வருடம் 314 நாளிலும், சனி 29 வருடம் 168 நாளிலும், இராகுகேது 18 வருடம் 8 நாளிலும் சூரியனைச் சுற்றிவருகின்றன. சந்திரன் பூமியோடு சேர்ந்து சூரியனைச் சுற்றி வருகையில் 29 நாள் 13 மணிக்கொரு முறை பூமியையும் சுற்றி முடிக்கின்றது. சூரியன் இராசி மண்டலத்தை ஒரு முறை சுற்றிவர ஒருநாள் செல்லுமாதலால் நான்கு மினிற்றில் 1 பாகை ஓடும். எனவே குறித்த ஒரு நாளில் ஒரு நட்சத்திரத்துடன் ஒருமித்து உதிக்குஞ் சூரியன் மறுநாள் அந்நட்சத்திரத்துக்கப்பால் ஒரு பாகை தூரத்திலிருக்கும்.

சூரியன் சித்திரை மாதம் 1-ம் தேதி மேட ராசியின் முதற்பாகை ஆரம்பத்திலும் 2-ந் தேதி அவ்விராசி இரண்டாம் பாகை ஆரம்பத்திலும் சஞ்சரிப்பர். இவ்வாறே அம்மாதம் 30 தேதிகளிலும் 30 பாகைகளிலும் சஞ்சரித்து இடபத்தின் 1-ம் பாகையில் பிரவேசிப்பர். இப் பிரவேசகாலம் வைகாசி மாத ஆரம்பமாகக் கொள்ளப்படும். இவ்விதமே மேடம் முதல் 12 இராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்குங்காலம் சித்திரை முதல் பங்குனியீறுகிய 12 மாதங்களாகும். ஆனி மாதம் சித்திரையிலிருந்து 3 வது மாதமாகும். மேடத்திலிருந்து மூன்றுவது ராசி மிதுன

## விநாயகஷஷ்டி விரதம்

கார்த்திகைமாதக் கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் மார்கழி மாத சுக்ல ஷஷ்டி வரையுமுள்ள 21 தினங்கள் (சில காலங்களில் நாள் குறைவதுமுண்டு) விநாயகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயக விரதம் என்று சொல்லப்படும். இவ்விரதம் அனுஷ்டிப்பவர்கள் அதிகாலை ஸ்நானம் செய்து ஆசாரத்துடன் செய்து ஆலயதரிசனம் செய்து விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் முதலியன செய்வித்து வணங்கி ஒரு பொழுது உட்கொள்ள வேண்டும். இக்காலத்தில் 21 இழை காளாலான நூலை ஆடவர் வலக்கரத்திலும், பெண்கள் இடக்கரத்திலும் கட்டி தமக்குக் காப்பாகக் கொள்வர்.

இருபத்தொராம் நாள் சதயமும் ஷஷ்டியும் சேர்ந்து வருமாயின் உத்தமநாளாகும். இவ் வருடம் மார்கழி 6உ (21-12-82) செவ்வாய்க் கிழமை ஷஷ்டியும் சதயமும் வருவதால் மிக விசேடமான நாளாகும். இதனை ''சதயந் தொட்ட ஷஷ்டி நல்விரதம்'' எனப் புகழ்வர். இத்தினத்தில் உபவாசமிருந்து மறுநாள் பாரணஞ் செய்து விரதத்தை நிறைவேற்றுவார்களாக.

''வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்''

மாவதால் சூரியன் ஆனி மாதத்தில் மிதுனத்தில் சஞ்சரிப்பர். ஆடி மாதம் நான்காவது மாதமாக லால் சூரியன் ஆடி மாதத்தில் நான்காவது ராசியாகிய கர்க்கடகத்தில் சஞ்சரிப்பர். இவ்வாறே ஆவணியில் சிங்கத்திலும், புரட்டாதியிற் கன்னியிலும், ஐப்பசியில் துலாத்திலும், கார்த்திகையில் விருச்சிகத்திலும், மார்கழியில் தனுவிலும், தையில் மகரத்திலும், மாசியிற் கும்பத்திலும், பங்குனியில் மீனத்திலுமாகச் சஞ்சரிப்பர்.

தை மாதம் 7-ந் தேதி சூரியன் எங்கே நிற்பர்? தைமாதம் சித்திரையிலிருந்து 10-வது மாதமாகும். மேடத்திலிருந்து 10-வது இராசி மகரம், ஒரு நாளுக்கு ஒரு பாகை வீதம் 7 நாட்களுக்கு 7 பாகை வருமாதலால் சூரியன் தை மாதம் 7-ந் தேதி மகர ராசியில் முன்பின்னுக 7-ம் பாகையில் நிற்பர்.

ஓர் ராசியில் சூரியன் 1 மாதமும், சந்திரன் $2\frac{1}{4}$ நாளும், செவ்வாய் 40 நாளும், புதன் 30 நாளும், குரு 1 வருடமும் சனி $2\frac{1}{2}$ வருடமும், இராகு $1\frac{1}{2}$ வருடமும் கேது $1\frac{1}{2}$ வருடமும் சஞ்சரிப்பார்கள். இவை மத்திம அளவுகள்.

பூமியின் சுழற்சி 24 மணித்தியாலங்கட்கு 360 பாகையாகும். 24 மணித்தியாலம் 60 நாழிகையாதலின் ஒரு நாழிகைக்கு 6 பாகை வீதம் அது சுழலும். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஒரு கிரகம். சந்திரன் 30 நாளுக்கொரு முறை பூமியைச் சுற்றி வருவதால் ஒரு நாளில் 12 பாகை ஓடுவர். அமாவாசை அந்தத்தில் சூரியனுடன் உதிக்குஞ் சந்திரன் மறுநாள் சூரியன் உதிக்கும் போது சூரியனிலிருந்து 12 பாகை விலகி நிற்பர். இப்பன்னிரண்டு பாகை தூரத்தையும் பூமி சுழன்று முடித்த பின்பே சந்திரன் உதயமாகும். பூமி 12 பாகை சுழல 2நாழிகை எடுக்கும். ஆதலின் அமாவாசைக்கு அடுத்தநாள் சூரியன் உதித்து 2 நாழிகைக்குப் பின் சந்திரன் உதிப்பர். இவ்வாறு நாள்தோறும் 2 நாழிகை வீதம் பிந்தி சந்திரன் உதயமாகும்.

சந்திரன் ஒரு நட்சத்திரத்தில் ஏறக்குறைய 60 நாழிகை சஞ்சரிப்பர். ஒரு குழந்தை பிறக்கும் போது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறதோ அந்த நட்சத்திரமே குழந்தையின் ஜன்ம நட்சத்திரம் எனப்படும்.

இராகு கேதுக்களைத் தவிர ஏனைய கிரகங்கள் வலஞ்சுழியாக ஓடும், இராகு கேதுக்கள் மட்டும் இடஞ்சுழியாக ஓடும். (தொடரும்)

## இராகுவின் பலம்

ஜாதகத்தில் ராகு மிக்க பலமுள்ளவர். இவர் மேடம், இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் கும்பம் ஆகிய இராசிகளிலொன்றில் இருந்து அந்த இடம் இலக்கினத்திலிருந்து கேந்திர, திரிகோண, தன, பாக்கிய, லாப ஸ்தானங்களில் ஒன்ருக வரின் ராகுதசை புத்தி காலங்களில் நல்ல யோகத்தை செய்வார். சுபருடன் சேர்ந்தோ சுபர் பார்வை பெற்ருே இருப்பின் இன்னும் கூடுதலான ராஜயோகத்தைத் தருவார்.

மேற்கூறப்பட்ட ஸ்தானங்களிலிருந்தாலும், பாபர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெறுவாராகில் சண்டை சச்சரவுகளும், துயரங்களும், இழப்புக்களும் உண்டாகும்.

எனவே சுபபலம் பெறவேண்டியது அவசியம். சுபபலம் பெற்ற ராகு தன் தசை புத்தி காலங்களில் ஜாதகரை உயர்நிலைக்கு உயர்த்துவார். பதவிகளில் உயர்வும், பொருள் பண்டங்களும் சேரும். காணி, பூமி, வீடு முதலியவை வந்து சேரும். பெரியவர்களின் தொடர்பை ஏற்படுத்தும். குடும்பத்தில் சுபகருமங்களை நடாத்தும். பொலிஸ், ராணுவம் முதலியவற்றில் ஈடுபட்டவர்கள் உயர்ந்த பதவிகளையடைவர்

வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு லாபமும் பணவரவும் மிகுந்து காணும். வெளிநாட்டுப்பயணம், அந்நிய பாஷைப் பயிற்சி, வெளிநாட்டுத்தொடர்புகள் முதலியவற்றைக் கொடுக்கும்.

ஜாதகத்தில் 6, 8, 12-ம் இடங்களில் ராகு இருந்தால் இவர் தசை, புத்தி காலங்களில் பொருள் நட்டங்களும், அவமானமும், இனசன பகையும், அரசாங்க விரோதங்களும், மனக்கவலைகளும் ஏற்படலாகும்.

# ஆய்வு மன்றம்

சி. உமையாவதி வியாபாரிமூலை, அல்வாய்.

செவ்வாய் 4-ம் அதிபனுய் 11ல் (லாபத்தில்) ஆட்சி பெறுவதும், சூரியன் அட்டமாதிபனுயி னும் சுபர் திருஷ்டி பெறுவதும் குருவும் சந்திர னும் ஒரே இராசியில் கேசரியோக வலிமைபெறு வதும் அதிக கஷ்டங்கள் ஏற்பட ஏதுவாகாதே! செவ்வாய் தசை முடிவில் இராகு தசையிலும் ருதுவாகினுலும் சாத்திர சம்மதமே!

க. தெய்வேந்திரம் மட்டுவில் நாடு, பூநகரி.

இலக்கினம் உட்பட எல்லாச் சுபக்கிரகங்க ளும் பாபர் மத்தியமும் பாபர் திருஷ்டி அல் லது சேர்க்கையும் பெறுவது உமக்கு ஏதோ ஒரு வகையிலாவது கஷ்டங்கள் வந்துகொண்டேயிருக் கும். 6-10-82 முதல் ஏழரைச் சனீஸ்வரன் கோசர சஞ்சாரமும் தொடங்குகின்றது. உண்மை யான பக்தியுடன் விக்னேஸ்வர வழிபாடும் சனிப் பிரீதியும் செய்துவரின் சாந்தியுண்டாகும்.

வேலுப்பிள்ளை தவச்செல்வன்
தவசிகுளம், மிருசுவில்.

வெளிநாடு செல்லநினைக்கும் எண்ணம் கை கூடிவரினும் எதிர்பார்ப்புகள் நிறைவுபெறப் பல தடைகள் உண்டாகலாம். தாயாரையும் சகோதர சகோதரிகளையும் நல்ல நிலையில் வைத்திருக்க நினைக்கும் நல்லெண்ணமே விரைவில் உமக்கு நல் வாழ்வு தரும். குலதெய்வ வழிபாட்டைக் கிரம மாகச் செய்துவருக.

ம, ஜெயக்குமார்,
''விடிவெள்ளி'' 1-ம் குறுக்குவீதி இரட்மலானை.

உறவினரின் விருப்பு வெறுப்புக்களை அனுசரி யாமல் உமது சொந்த விருப்பப்படி இயக்குவீரா யின் (பல தடை தாமதங்களுக்கிடையிலும்) திரு மணம் விரைவில் சித்திக்க இடமுண்டு.

இ. பாமினி கலட்டி, பருத்தித்துறை.

இலக்கினமும் களத்திரஸ்தானமும் பாபகர்த் திரி யோகம் பெறுகின்றன. விவாக விஷயத்தி லும் பல சிக்கல்கள் உண்டாகலாம். குறை குற் றங்களை அதிகம் சீர்தூக்காமல் ஒத்துப் போவீர் களானல் விரைவில் விவாகம் சித்திக்கும். பக்தி யுடன் தெய்வவழிபாடும் அவசியம்.

சி. கணேச ஐயர் அனலைதீவு.

கடந்த 1980 அக்டோபர் 1ம் திகதியளவில் உங் களுக்கு அட்டமாதிபன் மகாதசை தொடங்கி நிகழ்கின்றது. குடும்பத்தில் சிக்கல்கள் நேத்திர ரோகம் போன்றவை தோன்றினலும் பயபக்தி யுடன் இறைவன் தொண்டு செய்யும் உங்களுக்கு ''நானான்செய்யும் வினைதான் என் செய்யும்'' சிவநாராயணர்களை உபாசனை செய்து வழிபடுக. நன்மை பெறுவீர்கள்.

எஸ். எஸ். சுகுமார் கலுகல எஸ்ரேட், நமுனகுல,

உங்கள் சாதகத்தின் கிரகநிலை தவருகக் காணப்படுகின்றது. இலங்கையில் எந்த மாவட் டத்தில் அதாவது மாவட்டத் தலைநகரில் ஜென னம் நிகழ்ந்தது என்பதை விபரமாகக் குறிப் பிட்டு விண்ணப்பித்தால் சரியான கிரகநிலையை தருவோம்.

தியாகராசா ஜெயசீலன்
47, ஈச்சமோட்டைவீதி, யாழ்ப்பாணம்.

முற்பிறவியில் செய்த வினைப்பயனுக வந்த வினை தொடராமல் பக்தி சிரத்தையுடன் அழகி யல் கலைகளுடன் சம்பந்தப்பட்ட வியாபாரம், கணக்குப்போன்ற தொழில்களில் துணிவுடன் முயற்சித்தால் உமது எதிர்காலம் சிறப்பாக அமையலாம்.

க. சிவமணி 317, பாண்டியன் குளம்.

விவசாய முயற்சிகள் சுமாராகப் பலன் கொடுக்கும். வெளிநாடு சென்றுலும் நல்ல வரு மான மிச்சம்தரும் வேலைவாய்ப்புக்கு நிச்சயமில்லை என்பது கிரகநிலை முடிபு. எதிலும் ஏமாற்றப் படாமல் செயலை நிதானமாகச் செய்து பலன் பெறுக.

பொன். விஜயகுமார்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

உமக்கு அட்டமாதிபன் தசையில் ஏழரைச் சனீஸ்வரனின் கோசர சஞ்சாரமும் சேர்ந்து நிகழ்தலின் மன அமைதி பெறமுடியவில்லை. 1982 அக்டோபர் 6ல் ஏழரைச் சனீஸ்வர கோசரசஞ் சாரம் கழிதலின் இக்காலம் முதல் கஷ்டசாந்தி ஏற்படுதலுடன் தொழிலும் கிடைக்கும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.8

முதலாம் பரிசு ரூ. 50/-

## போட்டி நிபந்தனைகள்

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்,
2. 1-1-1983க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 8
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 ரி | 3 ய | 4 ப | 5 ட் | 6 ட |
| 7 ரு | ■ | 9 த | 10 ஞ் | 11 ச | 12 ம் |
| 13 ட | 14 யோ | 15 ம் | 16 ச | 17 க | 18 க |
| 19 ம் | ■ | 21 ன | 22 ம் | ■ | 24 ரு |
| ■ | 26 ப | 27 க்ஷி | ■ | 29 த | 30 ச் |
| 31 ப | 32 ரி | 33 ஞ | 34 ம | 35 ம் | ■ |

பெயர் [illegible]

விலாசம் [illegible]

[illegible]

### இடமிருந்து வலம்

1 இறுதியில் 'ர்' சேர வரும் பெயர் இந்திய விண்ணூலின் ஆதிகர்த்தாவைக் குறிக்கும்.

9 இது சரனடைதல் எனப் பொருள்படும்.

13 சந்திரனுக்கு 6,8,12 இல் குரு சஞ்சரிப்பதால் ஏற்படும் யோகம் குழம்பியுள்ளது.

21 இச்சொல்லின்முன் ஒரெழுத்தைச் சேர்க்க இராசியொன்று உருவாகும்.

26 பறவையைக் குறிக்கும் வடசொல் இது.

29 தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் 10 என்பதை இது குறிக்கும்.

31 இயற்கையாகவே மாற்றமடைதலை இவ்வாறு கூறுவர்.

### மேலிருந்து கீழ்

1 கேட்போன், நின்றநிலை முதலியவற்றுற் சொல்லுஞ் சோதிடம் இது.

3 மாறியிருக்கும் இது சூரியன் கர்க்கடகம் முதல் தனுசு ஈறுகவுள்ள ஆறுராசியுஞ் செல்லுங் காலமாகும்.

4 இது வறுமை எனப்பொருள்படும்.

5 தலைகீழாகவிருக்கும் இதில் ஒலிப்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

6 சிரமத்தை உணர்த்தும் இச்சொல்லின் ஒரெழுத்தைச் சிரமமின்றி ஒழுங்காக்கவும்.

26 இதில் பந்தயமும் மேற்கொள்வர்.

29 இதன் இடையே 'ன' சேர அமையும் சொல்லுக்குக் காரகன் வியாழ பகவானுகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 இன் விடைகள்

இடமிருந்து வலம்

1. சமாகமம் 8. அதிகாரம் 13. கிரகம் 19. ராமன் 23. பட்(டு) 28. கடல் 31. திருவாசகம்.

மேலிருந்து கீழ்


2. மாரகன் 3. மகரம் 4. காமம் 5. தி(ன)ம் 12. அவிட்டம் 13. கிராந்தி 23. பகல் 28. சக

பரிசில் பெறுவோர்;

1-ம் பரிசு: க. கீதா
16/11 பொலிஸ் நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

2-ம் பரிசு: வ. சின்னையா
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

3-ம் பரிசு: சி. சாந்தலிங்கம்
கலைமகள் வீதி, தையிட்டி,
காங்கேசன்துறை.




அனைவருக்கும்
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

நீலந் தோய்க்கும் சிரமம் வேண்டாம்
உங்கள் சீருடைகள் மிகுந்த
வெண்ணிறமடைவதற்குச்
சிறந்த வழி — சிரமமில்லாத வழி
சிக்கனமான வழி ஒன்றே ஒன்றுதான்
மில்க்வைற் நீலங் கலந்த நீலக் கட்டிகளை
சம்பூரண சலவைக்காக
உபயோகித்தலாகும்.

பளிச்சிடும் வெண்மைக்குப் பாவியுங்கள் **"மில்க்வைற் நீலசோப்"**

10 மேலுறைகளை அனுப்பி புத்தாண்டுக்குரிய காந்தி நீதிக் கலண்டரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**பாவனையாளர் நலன் கருதி வெளியிடும்**

## மில்க்வைற் தொழிலகம் — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233

---

# திருமணமா?

உங்களுக்குத் தகுந்த திருமணச் சோடிகளை எமது கம்பியூட்டர்கள் மூலம் தெரிந்து கொள்ளுங்கள். இந்த ஸ்தாபனம் கலியாணத் தரகர்களல்ல. கமிஷன், தரகு, கூலி ஒன்றும் அறவிடப்பட மாட்டாது. சேவைக்காக ஓர் பதிவுக் கட்டணம் எடுக்கப்படும்.

திருமண ஆலோசகர்கள்:

**கீதன் றேடர்ஸ்**

நல்லூர் கந்தசுவாமி கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

வர்த்தக
ஸ்தாபனங்களின்
விற்பனையைப்
பெருக்கிடும்
விளம்பர சேவை

அறிவிப்பாளர்:
மேஜர் ஷண்

# மணிக்குரல்
# விளம்பர சேவை

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. No. Q. B. 59/300/183/82

★ கலண்டர் பாவனையாளர்கட்கு ஓர் நற்செய்தி!

★ சிக்கனச் செலவுக்கோர் வரப்பிரசாதம்!

குறைந்த விலை! சிறந்த ரகம்!!

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!

# திருக்கணித பஞ்சாங்க

## மாதக் கலண்டர்

ஒவ்வோர் நாளுக்கும் தமிழ், முஸ்லிம் திகதிகள், திதி, நட்சத்திரம் விசேட தினங்கள் ராகு காலம், உற்சவங்கள், விடுமுறைத் தினங்கள் முதலிய சகல அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

விலை ரூபா: **7-50** மட்டுமே.

வியாபாரிகட்கு தகுந்த கமிஷன் உண்டு

எல்லா **"சோதிடமலர்"** வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

---

குறைந்த விலையில்

# 1983-க்கான டயறி

இத்தினக்குறிப்பு மாணவர்கட்கும் சாதாரண மக்களுக்கும் அன்ருட பாவனைக்குச் சிறந்தது.

* வியாபாரிகட்கு கழிவு உண்டு
* புதுவருட அன்பளிப்புச் செய்யும் ஸ்தாபனங்களுக்கு கழிவு உண்டு.

விலை ரூபா: **10/-**

விபரங்கட்கு:

## திருக்கணித நிலையம்

மட்டுவில், — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280